உ
சிவமயம்



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும்,
திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. கோபாலபிள்ளை நாகேஸ்வரன்

(பஞ்சன்)

(கண்டாவளை பிரதேச செயலர்)

அவர்களது சிவபதப்பேறு குறித்த

# பஞ்சதீபம்

25.04.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும்,
திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. கோபாலபிள்ளை நாகேஸ்வரன்

(கண்டாவளை பிரதேச செயலர்)

அவர்கள்

| மனம் மகிழ | மனம் நெகிழ |
| --- | --- |
| 04.02.1960 | 26.03.2018 |

## திதி வெண்பா

இணையிலா ஏவிளம்பி இனியபங்குனி பன்னிரண்டில்
துணையெனப் பூண்ட பூர்வபக்கத் திதி தசமியில் - அணையென
அருள்வேண்டி அருட்குமரன் நற்றாளில் நாகேஸ்வரன்
இருள்நீத்து இறையடி சேர்ந்த நன்நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும்,

திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. கோபாலபிள்ளை நாகேஸ்வரன்

(கண்டாவளை பிரதேச செயலர், முன்னாள், கிளிநொச்சி உதவும் உறவுகள் அமைப்பு உபதலைவர், கிளிநொச்சி மகாதேவா ஆசிரம காப்பாளர், கிளிநொச்சி கனகாம்பிகை அம்மன்கோவில் தற்காலிக கூட்டத் தலைவர், யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை- பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர், கிளிநொச்சி சத்யசாயி மண்டலி முன்னாள் உபதலைவர், ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் உபதலைவர், பணிப்பாளர்)

அவர்களது சிவபதப்பேறு குறித்த

# பஞ்சதீபம்

25.04.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பண்பட்ட தமிழ் மண்ணிலே
பிறந்து வளர்ந்து - தன்
உதிரத்தை எமக்காய் ஈந்து - இன்று
விண்ணிலே கலந்து - எம்
நெஞ்சிலே நிறைந்து
நினைவாக நிற்கின்ற எங்கள்
பேசி நின்ற தெய்வம்
அமரர் திரு. நாகேஸ்வரன் அவர்களின்
பாதகமலங்களில் இந்த
பஞ்சதீபத்தைக் காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இங்ஙனம்*
*நினைவு சுமந்து துதிக்கும்*
*மனைவி, மகன்*
*மற்றும் குடும்பத்தினர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்ச புராணம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
　　தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
　　கொண்டுபோவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா
　　லேழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண்
　　டஞ்ச னெஞ்சே.

## திருவாசகம்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனையும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண்டென்னுள்
இருட் பிழம்பற எறிந்தெழுந்த
சுடர்மணிவிளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சொதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்லக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படளொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
கில்லாண்டிற் சிதையுஞ்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டெனும் பதங் கந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வெண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஐங்கரனை ஒத்தமன மைம்புலனும் கற்றிவளர்
அந்திபக லற்றநினை - அருள்வாயே
அம்புவித னக்குள்வளர் செந்தமிழ்வ ழுத்தியுனை
அன்பொடுது திக்கமனம் - அருள்வாயே
தங்கியத வத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திரவெ ளிக்குவழி - அருள்வாயே
தண்டிகைக னப்பவுசு எண்டிசைம திக்கவளர்
சம்ரமவி தத்துடனே - அருள்வாயே
மங்கையர்சு கத்தைவெகு இங்கிதமெ னுற்றமன
முன்றனைநி னைந்தமைய - அருள்வாயே
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரட்சைபுரி
வந்தணைசு புத்தியினை - அருள்வாயே
கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பரருள்
கொண்டுமுட லுற்றபொருள் - அருள்வாயே
குஞ்சரமு கற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கொங்கணகி ரிக்குள்வளர் - பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அமரர்

# திரு. கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அவர்களின் வரலாற்றுத் தடங்கள்...

கற்பக தருவாம் பனையும் தெங்கும்
மிடுக்குடன் நிமிந்து நிற்கும்
நெற்பயிர் அதுவும் நீண்டு செழித்து
நேர்மையாய்க் கதிர்கள் பாய்ச்சும் - எங்கள்
பொற்றிரு நாட்டின் புகழை புகையிலை
பூசணியும் புடலையொடு கத்தரி மிளகாய்
வெற்றியாய் விளைந்து நின்று எங்கள்
வியர்வைக்கு அர்த்தம் கொடுக்கும்
நற்றமிழ் வல்லமக்கள் நலமுடன் வாழும்
நாரந்தனை நமது பதியே.

வடக்கும் தெற்கும் வற்றாத கடல்வளமும்
வானுயர்ந்த கோபுரங்கள் கோயில்களும்
அடக்கமாய் ஆநிரைகள் அழகான கன்றுடனே
பெரியவெளி சென்று பசிபோக்கக்
கிடக்கின்ற சரவணை கிழக்கினிலே எல்லை
மேற்கெல்லை இன்னும் மெருகூட்ட
கடக்க வரும் கரம்பொன் நகர்
காசினியில் புகழ்பூத்த வர்த்தகர்பூமி
முடக்க மின்றிநம் முன்னோர் வாழ்ந்திருந்த
நாரந்தனை நமது பதியே.

நாரந்தனை மக்கள் நலமாக வாழ்வதற்காய்
தான்தோன்றியாக வந்த மனோன்மணியும்
சூரனுடல் வதைத்த சுப்பிரமணியன் எனும்
கர்ணந்தோட்டத்துக் கந்த சுவாமியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரம் நிறைந்தவளாம் முத்துமாரி அம்மன்
தம்பாட்டி எனும் தலத்திலும் - எம்
பாரம் போக்கவந்த பவுல் உடனே
இருதயநாதரும் லூர்து அன்னையும்
கோரம் கொள்ளாது கோயில் கொண்ட
நாரந்தனை நமது பதியே.

கல்விக் கண்திறந்து கற்றவராய் நாம்மிளிர
கணேச வித்தியா சாலையும்
வல்லவராய்க் கல்வியிலே வளம் சேர்க்க
தம்பாட்டி அரசினர் பாடசாலையும்
புல்லராய் வாழாமல் புனிதராய் நாம்வாழ
றோமன் கத்தோலிக்க பாடசாலையும்
எல்லோரும் இணைந் திருந்து எழிலாக
இன்பம் சிறந் தோங்க
நல்லோர்கள் நிறைந்து வாழும் - எங்கள்
நாரந்தனை நமது பதியே.

இத்துணை எழில்மிகுந்த எம்மண்ணாம் நாரந்தனையில்
பக்தியில் மிகுந்கு வாழ்ந்து பண்பிலே சிறந்து ஓங்கி
நித்தமும் கர்ணந்தோட்டக் கந்தனைத் தொழுது நின்ற
**நாகமுத்து - வள்ளியம்மை** தம்பதிகள் நலமுடன் பெற்றெடுத்த
**கோபாலபிள்ளை** என்னும் கோமகன் தானும்
வேல்வந்து அணைந்ததாலே வேலணை என விளங்கும்
வேலணையூரில் பிறந்து வையகம் வியக்க வாழ்ந்த
**கந்தையா - பொன்னம்மா** குடும்பம்
கர்வமாய்ப் பெற்றெடுத்த **தில்லையம்மா** தன்னைக்
கரம்பற்றி களிப்புடன் இணைந்த வாழ்க்கை
நற்றவப் பயனால் பெற்றார் நன்மழலைகள் அறுவர் தன்னை
பெற்றவர் பெருமைகொள்ள பிறந்தனள் **நிர்மலாதேவி**
மற்றவர் வியக்கும்வண்ணம் வளர்ந்தவள் வயதுவந்து
முத்திரைச் சந்தை வாழ்ந்த முத்தென வந்த சிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகன் **விஜயன்** தன்னை விவாகமும் செய்து கண்டாள்
உத்தமப் புதல்வர் இருவர் **வித்யா. வினோசன்** என்போர்

பரமனில் கொண்ட பக்தி பரிந்திட வந்தான் மண்ணில்
**பரமேஸ்வரன்** எனும் மைந்தன் பாரினில் பிள்ளையாக
உரமது ஊட்டி வளர்த்து உன்னத நிலையில் வாழ்ந்து
கரமது பிடித்தான் காளை அறமது சிறந்த அரியாலை வாழ்
இரவினில் இருளகற்றும் **இந்துமதி** எனும் முழுமதியை
வரமதாய் வந்தார் வாரிசாக **கரிசன், சஞ்சிகா, லக்ஸ்மன்** என்போர்

முத்தென வந்துதித்தான் மூன்றாவதாய் **நாகேஸ்வரன்** - நம் மண்ணின்
சொத்தென வந்தவன் அவன்சரிதை சொல்கிறேன் பின்

நான்காவதாய் வந்தாள் நாகேஸ்வரன் பின்னால்
செந்தாமரை மலரெனவே **செந்தமிழ்ச்செல்வி** - வயது
வந்ததும் தேடி வரனெனக் கண்டனள் காரைநகர்
செல்வத்தின் நாயகனாம் **செல்வநாயகம்** தனை
இல்லறம் இனிக்கவே இன்புறக் கண்டனர் **ராகவி** தனை

ஐந்தாவது பெண்ணாய் கெஞ்சியும் கிடையாதென்பார்
சந்ததி தழைக்கவென வந்தனள் **சாந்தினி** என்பாள் - திருமண
பந்தத்தின் பலனாய் பரந்தன் வாழ் **விக்னேஸ்வரமூர்த்தி**
சொந்தமாய் ஆகிட சொர்க்கத்தில் திளைத்தனர்

ஆறாவதாக அறுமுகன் அருளாள் பிள்ளைப்
பேறாகக் பெற்றனர் எமைப்பிரிந்திட்ட **மதியழகன்** தனை
மாறாத மணம்மிக்க மருமகளென வந்தாள் **சுகந்தரூபி** - அவர்
பேறாகப் பெற்றனர் பிள்ளைகள் இரண்டு **பவிநாத், யதுசாந்த்**

முத்தென வந்துதித்த மூன்றாவது பிள்ளை **நாகேஸ்வரன்**
தத்தித் தவண்டு தடக்கி விழுந்தெழுந்து தடுமாறி நடந்து
புத்தியுள்ள பிள்ளையாய் புரளிகளும் பலசெய்து
வித்தகனாய் ஆவதற்கு விரைந்தான் பாடசாலை - றோமன்
கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையில் ஆரம்பக்கல்வியும் - பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்திட்ட தவனுக்கு வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை
சத்தியம் தர்மத்தை சாதாரணதரம் வரை கற்றான் - வேலணை
மத்திய கல்லூரி சென்றான் உயர்தரம் கற்றிட
புத்தியில் சிறந்து புரிந்தனன் சாதனை - மாணவர்
மத்தியில் முன்னணி மாணவர் ஐவரில் ஒருவனாய்
நாகேஸ்வரன், நவலட்சுமி, தேவிகா, சந்திரபாலன், சோமசுந்தரம்
வாகை சூடி வந்தனர் வகுப்பினில் முன்னிலை
கூட்டமாய் ஐவரும் ஒரு குடும்பமாய் இருந்தனர்

காலச்சக்கரம் உருண்டிட காளையாய் ஆகினன்
நாவலர் பெருமானின் நல்லூரில் பிரதேசசபையில்
எழுதுவினைஞனாய் ஏடுதொடக்கினான் வேலைக்கு
ஆயிரத்துத் தொழாயிரத்து எண்பத்து நான்கினில்
தரம் இரண்டு (B)பீயில் தொடங்கினார்

இருபத்துநான்கு பங்குனி ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூற்று
ஏழில் நாரந்தனையைச் சேர்ந்த **சரவணபவன்-விசாலாட்சி** தம்பதியின்
மூத்த புதல்வி முழுமதியின் வதனமுடை **மலர்விழி**யைக் கரம்பற்றி
இல்லறம் என்னும் நல்லறம் பூண்டு இனிதே இயற்றிய
இல்லறப் பயனால் **இளம்பரிதி** என்னும் ஏகபுதல்வன்
வல்லவன் அவனும் வாரிசாய் வந்தனன் ஆங்கே

காலம் உருண்டது கடமையும் நீண்டது
நாட்டில் பிரச்சினை நடனம் புரிந்தது
கரைச்சி பிரதேச சபையில் தற்காலிகமாக
தை ஒன்று ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறு முதல்
ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறு
ஆனி பதினான்கு வரை சேவை செய்து - பின்

ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றாறு முதல்
வவுனியா நகரசபையில் தரம் இரண்டு ஏயில் சேவை செய்து
ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றொன்பதில்
சுப்ரா (SUPRA) பரீட்சை சித்தியும் எய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாயிரத்து ஒன்று வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி,
பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சில்
நிர்வாக உத்தியோகத்தராகக் கடமை புரிந்து
இரண்டாயிரத்து மூன்றில் இலங்கை நிர்வாகசேவைப்
போட்டிப் பரீட்சை சித்தியெய்தி

திருமலை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில்
உதவிப் பிரதேச செயலராகி
இரண்டாயிரத்து எட்டில் குச்சவெளிப் பிரதேச செயலகத்தில்
உதவிப் பிதேச செயலாராகி

இரண்டாயிரத்துப் பதினொராம் ஆண்டு கிளிநொச்சி
கரைச்சிப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலராகி
செப்டெம்பர் வரை கடமை புரிந்து கண்டாவளை
பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாராய் இறுதிவரை சேவையாற்றி
முப்பத்துநான்கு வருடங்கள் முழுமையாகப் பணிபுரிந்து
நாட்டுக்கும் வீட்டுக்கும் நலம்தேடி நன்மைகள் பலசெய்து
நாட்டுப் பிரச்சினையால் நலிந்த தமிழர்களின்
வீட்டுப் பிரச்சினைக்கு வீட்டுத்திட்டங்களும் விரைந்து சென்று
சாட்டுச் சொல்லாமல் சடுதியாய் முடித்துவைத்து

ஏழை மக்களின் ஏழ்மையைப் போக்கிட - தன்
தோளைக் கொடுத்து தொண்டுகள் செய்தவர்
கல்விகற்க வசதியற்ற மாணவர்க்குக் கைகொடுக்க - பெரும்
புள்ளிகளை அனுசரணையாளர்களாய்ப் பெற்றுக்கொடுத்து
அயராது உழைத்து அவருக்காய் அனுதினமும் பாடுபட்டார்

கண்டாவளையிலே கண்டுபிடிக்கப்பட்ட மூன்று கிராமங்கள்
அடையாளப்படுத்தப்பட்டு அனுசரணையாளர்களைப் பெற்று
செயற்றிட்டம் அவராலே இப்போது செயற்படுத்தப்பட்டது
முயற்சியெடுத்து முன்னின்று செயற்படுத்தும் முற்போக்குவாதி
வேலணை துரைச்சாமி மகா வித்தியாலயம் தனை
மீண்டும் மத்திய மகா வித்தியாலயம் எனப் பெயர்மாற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயன்று வெற்றியும் கண்டார் வேறு சிலருடன் சேர்ந்து
நாரந்தனை தெற்கிலிருந்து வடக்குத் தெருவையும்
சீர்செய்ய வேண்டுமென சிரசில் தான்கொண்டு
ஆவனசெய்வதற்கு அரும்பணியாய்க் கொண்டிருந்தார்

இறைவழிபாட்டிலும் இறுதிவரை ஈடுபட்டு
கறையற்ற மனதோடு கடமையெனக் கொண்டு
நிறைவேற்றி வந்தவர் நீண்டநாள் வாழவில்லை
இறைவனோ அவரை இவ்வுலக நிலைகண்டு
குறைகளைக் கூறிக் கூப்பிட்டார் தன்னோடு
கள்வர்களும் கபடர்களும் காமுகரும் வாழ்கின்ற
பொல்லாத பூமியில் போதுமுன் வாழ்வு என
நல்லதே நினைத்து நன்மையே செய்கின்ற
நாகேஸ்வரனை நானழைப்பேன் என்றுசொல்லி
பூர்வ பக்கத்து புனர்பூச நட்சத்திரமும் தசமித் திதியில்
பங்குனி மாதத்து பன்னிரண்டாம் (26.03.2018) நாளில்
அங்கவரை அழைப்பதற்கு ஆளை அனுப்பிவைத்தான்
எங்கிருந்தோ வந்து எமன் எடுத்துவிட்டான் அவருயிரை
வேலைக்குப் போனவரோ வீடுதிரும்பவில்லை
காலையிலே போனவரோ கண்மூடித்தான் வந்தார் - பூ
மாலையிலே மிதந்துவந்தார் மணவாளக் கோலத்தில்
சோலையிலே சுற்றித்திரிந்த சோடிக்கிளியதுவும்
மழலைக் கிளியதுவும் மனமுடைந்து போயினவே
மண்ணில் பிறந்தோரெல்லாம் மரித்திடுவார் ஒருநாள் - இதை
எண்ணியே தேற்றிடுவோம் எம்துயர் களைந்திடுவோம்
அன்னாரின் ஆத்மசாந்திக்காய் ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி மனக்குமுறல்

என்னைக் கரம்பிடித்து இருபத்தோர் ஆண்டுகள்
சொன்னது ஒருவார்த்தை கூடாக நானறியேன்
அன்புக்கு இலக்கணமாய் அரவணைத்து வாழ்ந்தீர்கள்
பண்பின் சிகராமாய் பணிவாக வாழ்ந்தீர்கள்
எங்கே சென்றாலும் என்னிடம் சொல்வீர்களே
எங்கே சென்றீர்கள் என்னிடம் சொல்லாமல்
இன்னொரு பிறப்புண்டேல் எனக்கு இம்மண்ணில்
மன்னவன் உங்களையே மணவாளனாய் அடைவேன்
உங்கள் பிரிவாலே உளம்நொந்து தவிக்கின்றேன்
எங்கள் பிள்ளையோ என்னவோ ஆகிவிட்டான்
உங்களைப் பிரிந்ததனால் உளநோய்க்கு ஆளானான்
தாங்கமுடியவில்லை தடுமாறித் தவிக்கின்றோம்
வாங்களப்பா மீண்டும் வையத்தில் எமக்காக...!

# குழந்தை (இளம்பரிதி) குமுறல்

அப்பா என்மீது அன்பாக இருந்தீர்கள்
தப்பாமல் எப்போதும் தட்டிக்கொடுத்தீர்கள்
எப்போதும் எனக்கு எல்லாமே தருவீர்கள்
இப்போ என்னைவிட்டு எங்கேதான் சென்றீர்கள்
உங்களை எண்ணி ஒவ்வொரு நாளும்
உளம்நொந்து துடிக்கின்றேன் அப்பா
என்னைக் காண எப்போது வருவீர்கள் - என
எண்ணியே ஏங்கித் தவிக்கின்றேன் அப்பா...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றவள் பேதலிப்பு

பத்து மாதம் சுமந்து பெற்று
பாலூட்டித் தாலாட்டி வளர்த்தெடுத்து
பள்ளிப் பருவத்தே பள்ளிக்கு அனுப்பிவைத்து
பாதிவழி வந்து காலில் வலிக்குமென்று
தோளில் சுமந்து வந்து
அள்ளி அமுதூட்டி ஆராரோ பாடியுனை
அரவணைத்துத் தூங்கவைத்து
பெரியவனாய் உனை வளர்த்து
பிறர் மதிக்கப் படிக்க வைத்து
உறவுகளும் ஊரவரும் உனைமதிக்க
பிறர் பேசும் வார்த்தைகளில்
உத்தமனைப் பெற்றெடுத்த
பெருமையினை நானடைந்தேன்
சத்தியத்தின் திருவுருவாய்
சாதனைகள் படைத்தாயே
பெற்றவளை மறந்து நீ
பிரிந்தெங்கு சென்றுவிட்டாய்
வற்றாத கங்கையென வழிகின்ற விழிநீரும்
குற்றால அருவியென குவிந்திங்கு பாய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதர சகோதரிகள் புலம்பல்

ஒரு கொடியில் பூத்த மலர்களாய்
ஒற்றுமையாய் வளர்ந்தோம் வாழ்ந்தோம்
அக்கா என்றும் அண்ணன் என்றும்
தங்கை என்றும் தம்பி என்றும்
அன்பாய் எமை அழைப்பாய்
ஆறுதலாய்ப் பேசிடுவாய் - எமை
அரவணைத்த உன்கரங்கள்
அசையாமல் கிடப்பதென்ன
கட்டியணைத்த கைகள்
கட்டுப்பட்டுக் கிடப்பதென்ன
எப்போது உனைக் காண்போம்
இன்னொருகால் இப்புவியில்...!

# மாமனார் புலம்பல்

மகனாக இருந்தீரே மருமகனே நீரெனக்கு
இகமெங்கும் இருப்பவர்கள் இடருற்ற வேளையிலே
அகமது உருகிநின்று அவர்களுக்கு உதவினீரே
சுகமாக இருந்தீரே சொல்லாமல் எங்கு சென்றீர்
எம்மைப் பாசமுடன் நாடி நீர் வருவீரே
உம்மைப் பிரிந்திங்கு உளம்நொந்து வாடுகிறோம்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனன் மைத்துனிமார் புலம்பல்

மைத்துனரே எங்கள் மகத்தான மாணிக்கமே
எத்தனை இடர்வரினும் எமக்கிருந்தீர் உறுதுணையாய்
உத்தமனாய் வாழ்ந்து ஊருக்குச் சேவை செய்தீர் - எமைப்
பித்தரைப் போல் பிதற்றவைத்து பிரிந்தெங்கு சென்றீரோ!

# உற்றார் உறவினர் புலம்பல்

உற்றவர்க்கு ஒன்றென்றால் உடன் ஓடி வருவீரே
சற்றேனும் சளைக்காது சடுதியாய் வருவீரே
புன்னகை பூத்த வதனமும் போலியற்ற பேச்சும்
இன்னமும் எம்மனதில் இருக்குதையா நாகேஸ்வரா
நீர் பிரிந்து சென்றாலும் உம்நினைவு எந்நாளும்
பார்மீது அழியாது பலகாலம் நிலைத்திருக்கும்
மக்களுக்கு நீர் செய்த மகத்தான சேவைகளோ
எக்கணமும் எம்மனதில் இறுதிவரை இருந்துவிடும்
உன்னதமான உளம் படைத்த உமது ஆத்மா
விண்ணகத்தார் துயர்தீர்த்த வேலனடி சேர்வதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாரந்தனையின் நல்முத்து
# நாகேஸ்வரன்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு."

புற்தரையும் சோலைகளும் நெடிதுயர்ந்த
பனைமரமும் கற்றவர் புடைசூழ
விவசாய மன்னர்களும் மற்று சில தொழில் செய்து
மகிழ்வுடனே வாழ்ந்த பூமி. வரலாற்றுப் புகழ் கொண்ட
நாரந்தனை மண்ணதனில் வித்தகனாய் வந்துதித்து
விளைந்த நற்கதிராகி. முற்றியது அறுவடைக்குப் போவதற்கு முன்னர்
கொட்டிய பெருமழையும். வீசிய பெருங்காற்றும்
அள்ளியுனை அடியோடு சரித்ததென்ன யாமறியோம்
நாகேஸ்வரன் என்னும் பெயர் கொண்டாய்
நற்புத்தி உள்ளோனாய் நாற்றிசையும் பேரெடுத்தாய்
மண் மணக்க வான்தரும் மழைநீர் போல்
எம் குலம் தழைக்க வந்துதித்த குண்டுமணியே
உன்னை இழந்துவிட்டோம் என்ற சொல்லை
மனமது இன்னமும் ஏற்க மறுக்கிறது
கந்தகத்து வாசமது காற்றினில் கலந்துவர
கரைச்சி நகர் மக்களுக்கு கடுமையாய் நீ உழைத்தாய்
வெஞ்சமரில் வீடிழந்தும் விதவையாய் நின்றவர்க்கும்
அஞ்சலென அடைக்கலம் கொடுத்து
அன்னம் தண்ணீர் உண்ணாது அல்லும் பகலும் பாடுபட்டாய்
என்னவனே என்னருமைத் தம்பியே
வீழ்ந்துபோன எம்குலத்துப் பெருமைதனைத் தாங்கினாய்
அரசியல் தலைகள் உன்னை அணைபோட்டுத் தடுத்தபோதும்
அயர்ந்துறங்க நேரமின்றி காரியத்தில் கண்பதித்தாய்
உன் சேவை புரிந்த மக்கள் உன்பின்னே அணிதிரள
கண்டுகொள்ளப் பொறுக்காதோர் கண்டாவளை அனுப்பியதும்
அங்கிருந்த ஆறுமாதம் நீ புரிந்த சேவைதனைக்
கண்டுகொண்டோம் கடலாய் வந்த மக்கள் கூட்டம் தன்னாலே
உன் பலம் என்னவென்று உலகமே பார்த்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பாதம் சென்றடைந்தாய் அரற்றுகிறோம் ஐயனே
இன்னுமின்னும் உண்டு உனைப்பற்றி எழுதுதற்கு
வெந்த மனம் எழுதுதற்கு இடமது கொடுக்காது
இந்த அண்ணன் இதயத்தில் இன்னமும் வாழ்கின்றாய்
வந்த கண்ணீர் வைகையாய் விழியோரம் பாய்கிறது
சிந்துகின்ற கண்ணீரைக் காணிக்கையாக்கி உன் பாதக்கமலங்கில்
கண்ணீர்ப் பூக்களாய்ச் சமர்ப்பிக்கின்றேன்...!

உன் நினைவுகளைச் சுமந்து
அண்ணன் குமரகுருபரன்
(பரன்)

# இரங்கல் செய்தி

அமரர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அவர்களின் திடீர் மறைவு குறித்து அதிர்ச்சி அடைவதோடு அன்னாரின் சேவை என்பது மக்கள் சேவையாகவே கருதவேண்டும். இவர் அரசதுறையில் நியமனம் பெற்ற நாள்முதல் தனக்கென வாழா பிறருக்காக வாழ்ந்து தன் சேவையை மக்களுக்கு வழங்கியதன் பயனாக நிர்வாக சேவையில் உயர்பதவியான இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்று 2011ம் ஆண்டு முதல் கரைச்சி பிரதேச செயலாளராகவும் 31.08.2017 முதல் கண்டாவளை பிரதேச செயலாளராகவும் பணியாற்றி போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து தன் சேவையை ஆற்றிய வேளையில் கடமை நேரத்தில் மாரடைப்பு நோயால் திடீரென மறைந்து சென்றது அவரது கடின உழைப்பையே வெளிக்காட்டுகின்றது. இவ்வாறான மனிதர்களை இறைவன் விரைவாக தன்னிடம் அழைப்பது தான் நியதி. அந்தவகையில் அன்னாரின் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

திருமதி. விஜயகலா மகேஸ்வரன் (பா.உ)
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சரும்,
யாழ்-கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையால் மக்கள் உள்ளம் கவர்ந்த உத்தமன்

இலங்கையின் வடபால் அமைந்த யாழ் மண்ணில் பெருமை கொண்ட பிரதேசமாக விளங்கம் தீவுப்பகுதியின் வடபால் நன்னீர் வளம் கொண்ட நாரந்தனைப் பகுதியில் நாகமுத்து கோபாலபிள்ளையின் மைந்தனாக அவதரித்த கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அவர்கள் சிறுவயதில் இருந்தே அவ்வூர் மக்களால் பஞ்சன் என அன்பாக அழைக்கப்பட்டு இன மத பேதமின்றி வாழ்ந்து வந்தார். நாரந்தனை றோ.க. மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று வந்தார். அக்காலப் பகுதியில் அன்பின்பால் பல நண்பர்களை உருவாக்கிக்கொண்டார். உயர் கல்வி பயின்று பரீட்சையில் சித்தியடைந்த பின் வேலைகளை எதிர்பார்த்துக் காத்திருந்த வேளையில் பல சமூக, சமயப் பணிகளுடன் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். சனசமூக நிலையம், ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம், ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினராக இருந்து சமூக சேவைக்கு உறுதுணையாக இருந்த வேளையில், கர்ணந்தோட்டக் கந்தன், தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் பால் கவரப்பட்டு சமயப் பணிகளை ஆற்றிவந்தார். கல்வியின்பால் கொண்ட உறுதியான நம்பிக்கையின் ஊடாக அரசதொழிலில் உள்வாங்கப்பட்டு சேவை செய்யும்போது மக்களின் சேவை மகத்தான சேவை என எண்ணி பணியாற்றி வந்ததனை நாம் பல சேவைகளில் கண்டுகொண்டுள்ளோம். இடம்பெயர்ந்து பிறந்த பூமியை விட்டு நகர்ந்த பின்பும் தனது கல்வியை வளர்த்துவரும் வேளையிலும் சேவையின் பால் மிக உறுதியாக இருந்தார். திருமண வாழ்வில் தனது துணைவி யாக ஆசிரியரைப் பெற்றுக்கொண்டது இவரது கல்வி வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்டியது. இதன் காரணமாக பதவி உயர்வு பெற்று திருகோணமலை சென்று சேவையாற்றியபோதும் அங்குள்ள மக்களிடம் ஆற்றிய சேவை மக்கள் வெள்ளம் சான்றுபடுத்தியது.

தொடர்ந்து கல்வியில் மேற்கொண்ட பரீட்சைகள் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவி உயர்வு பெற்று கிளிநொச்சி பிரதேசத்தின் பிரதேச செயலராகக் கடமை புரிந்தபோது மக்களிடம் ஆற்றிய சேவை அளப்பரியது. இக்காலப் பகுதியிலும் தான் பிறந்த பூமியில் சமூகப் பணிகளையும், சமயப் பணிகளையும் மிகவும் உறுதியாக இருந்து நிர்வாகத்தினருக்கு சகல வழிகளிலும் ஒத்துழைத்தமை பல செயற்பாடுகள் மூலம் சான்றுபடுத்தி உள்ளது. இக்காலப் பகுதியில் பிறந்த ஊர் ஆலயங்களுக்கு மேலாக புளியங்கூடல் மகா மாரி அம்மன் கோயில், நல்லூர் கந்தன் ஆலயத்திலும் தனது பக்தி பூர்வமான வழிபாட்டை நாம் கண்டுகொண்டது மறக்க முடியாத ஒன்று. இவரது அரசசேவையின் பால் ஆற்றிய சேவைகள் பத்திரிகைகள் வாயிலாக நாம் அறியும்போது ஊர்மகனின் சிறப்பு மிகவும் இவ்வாறாக அமைகின்றது என்று நினைத்து எமது நாரந்தனைக் கிராமத்தின் பெருமையைத் தேடிக்கொண்டு உள்ளவர்களில் ஒருவராக திகழ்வதையிட்டு மிகவும் பூரிப்படைந்தோம். இவ்வாறான வாழ்க்கையில் வாழ்ந்து வரும் வேளையில் தனது சொந்த ஊரில் கடமைகளை இறுதி நேரத்தில் செய்வேன் என எண்ணியிருந்த வேளை இறைவன் தன்பால் ஈர்த்துக்கொண்டான். இது இறைவன் வகுத்த நியதி என்று நாம் எண்ணிக்கொண்டு அவரது வாழ்வில் சேவையில் மக்கள் உள்ளம் கவர்ந்த உத்தமரின் ஆத்மா சாந்தியடைய நாரந்தனை மக்கள் ஆகிய நாம் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

க.சகாதேவன்
தலைவர்
நாரந்தனை மக்கள் சங்கம்
24/U.K





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த மாமனிதன் அமரர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன்

கண்டாவளைப் பிரதேச செயலராக முன்னைநாள் கரைச்சிப் பிரதேச செயலாளராக எமது மண்ணிலே அரும்பெரும் சேவைதனை ஆற்றி மக்களின் இதயங்களிலெல்லாம் வேரூன்றி விசாலமாக வீற்றிருந்த மனிதருள் மாணிக்கமே கோபாலபிள்ளை நாகேஸ்வரனே "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் வள்ளுவப் பெருந்தகையின் அற்புத வாக்கிற்கமைய மண்ணிலே பிறந்த மகோன்னதனே! கடமை கண்ணியம் கட்டுப்பாடென்ற கொள்கை களுடன் எமது உறவுகளைக் கட்டியாண்ட மனிதாபிமானியே! செயற்கரிய பற்பல செயல்களைச் செய்து முடித்த செயல்வீரனே! மண்ணிலே செய்த மகத்தான கடமைகள் போதுமென்று சங்கரன் உந்தனை அழைத்தானோ விண்ணகத்திற்கு மாவீரா?

உந்தன் திடீர் மரணச் செய்தி கேட்டு நான்மட்டுமல்ல கண்டாவளைவாழ் மக்கள் அனைவருமே பதைபதைத்து அழுதார்கள். அர்ப்பணிப்புடன் தொண்டாற்றும் அற்புதர்களை இறைவன் ஏன்தான் அவசரமாக அழைக்கின்றானோ நானறியேன்! எம்மினத் தொண்டர் களையெல்லாம் தன்வசம் இழுத்து எமது இனத்தைத் தண்டிக்க இறைவன் தீர்மானித்து விட்டானோ எனத் தோற்றுகின்றது.

நீண்டகால இடைவெளியின்பின் திருவாளர் நாகேஸ்வரன் அவர்களுடன் பேசும் வாய்ப்பு 2016ம் ஆண்டில் கிடைத்தது. 2017ம் ஆண்டு வன்னியில் மிகவும் வறுமையுடன் வாழும் குடும்பம் ஒன்றிற்கு உதவ முடியுமா என்று கேட்டதற்கிணங்க அவரே நேரடியாக அந்தக் குடும்பத்தைப் போய்ப் பார்த்து அவர்கள் வாழ வசதியான வீடு ஒன்றினை அமைத்துக் கொடுத்தார்.

அமரர் நாகேஸ்வரன் அவர்கள் சட்ட வரம்போடு நில்லாது அதற்கும் அப்பாற் சென்று ஏழைகளுக்கு உதவிகள் புரிந்த உத்தமபுருசர். சட்டத்திற்கப்பால் சென்று சேவைகள் புரிந்ததால் இவருக்கு அவ்வப்போது நிர்வாகரீதியாகவும், சட்ட ரீதியாகவும் பற்பல இன்னல்கள் ஏற்பட்டன. எனினும் ஏழைக்கு உதவுகின்ற தனது மனித நேயத்தை என்றுமே கைவிட்டறியேன்.

அமரர் நாகேஸ்வரன் அவர்கள் என்றும் எப்பொழுதும் பாமர மக்கள் அருகே அணுகிச் சென்று தங்கள் பிரச்சனைகளைத் தெரிவிக்க மிகவும் எளிமையானவராகத் திகழ்ந்தார். அன்னார் தனது மனைவி மக்கள் உற்றார் உறவுகள் நண்பர்களுடன் நில்லாது அலுவலகத்தே கடமையாற்றிய அத்தனை ஊழியர்மீதும் மிகுந்த அன்பு செலுத்திய அற்புதராவர்.

அவர் இம்மண்ணுலகை விட்டுப் பிரிவதற்கு முதல்நாள் நல்லைக் கந்தனின் வாயிலில் எடுத்த பல புகைப்படங்களை முகநூலில் பதித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநூலைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தபோது அவரின் திடீர் பிரிவுச் செய்தி கேட்டதும் பின்வரும் வரிகளே என்மனதில் எழுந்தன.

எழும்போதும் நல்லூர்க் கந்தனே என்பேன்! எழுந்து மகிழ்ந்து தொழும்போதும் நல்லூர்க் கந்தனே என்பேன்! தொழுது உருகி அழும்போதும் நல்லூர்க் கந்தனே என்பேன்! ஆவிபிரிந்து உடலம் மண்ணில் விழும்போதும் நல்லூர்க் கந்தனே என்பேன்!அன்னாரைப் பிரிந்து வாடும் மனைவி பிள்ளைகள் உறவுகள் அத்துணைபேரையும் நல்லூர்க் கந்தனே காத்தருள வேண்டும்.

அமரர் நாகேஸ்வரன் எனது மாணவன் எனக் கூறுவதில் பெருமைப்படுகின்றேன். அன்னாரின் ஆத்மா அத்தன் அடிதனில் நித்தியமாகிட இறைபாதம் தொழுதேன்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கனடிய மண்ணிலிருந்து ஆசிரியர்
யோகநாதன் பாலசிங்கம்

# இரங்கல் செய்தி

மறைந்த கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அவர்கள் 2011.04.20 அன்று கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளராக பதவியேற்றதிலிருந்து நான் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய காலப்பகுதி வரை நான்கு வருடங்களாக என்னோடு கடமையாற்றிய நிர்வாக சேவை உத்தியோகத்தர் ஆவார். மிகவும் சவால் நிறைந்த காலங்களில் மீள்குடியேறும் மக்களுக்கான பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதில் முன்னின்று தொழிற்பட்டார். இரவு பகல் பாராது செயற்பட வேண்டிய காலகட்டம் அது. நாகேஸ்வரனும் அவ்வாறேதான் செயற்பட்டார். நாகேஸ்வரனிடம் பல திறமைகள் காணப்படுவதனையும் நான் அவதானித்துள்ளேன். இவர் இயற்கையின் மேல் ஈர்ப்பு உடையவர். கலை, கலாசார விடயங்களில் அதிக நாட்டம் உள்ளவர். தான் சார்ந்த மதப்பற்றுள்ளவர். ஏனைய மதங்களையும் மதிப்பவர். குடும்பத்தின் மேல் அன்புள்ளவர். சமூக மேம்பாடு குறித்து அக்கறை உள்ளவர். என்ன நடந்தாலும் பொறுமையோடும் மலர்ந்த முகத்துடனும் பிரச்சனைகளை எதிர்கொள்பவர்.

உண்மையில் நாகேஸ்வரனின் மரணச்செய்தி ஒரு பேரிடி தான். ஆண்டவன் நியமித்த நேரத்தை தடுத்த நிறுத்த யாரால் கூடும். அவரது பிரிவால் துயருறும் அவரது அன்பு மனைவி மலர்விழிக்கும் அன்னாரது அன்பு மகனுக்கும் இறைவன் தாமே மனஆறுதலை வழங்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

திருமதி.றூ.கேதீஸ்வரன்,
மாவட்டச் செயலாளர்.
முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

பஞ்சன் உனை நானறிவேன் பள்ளிக்கூடக் காலம்முதல்
பிஞ்சு வயதுமுதல் பிடிவாதமாய்ப் படித்து
வஞ்சமிலா நெஞ்சமுடன் வழிவழியாய் முன்னேறி
அஞ்சலென வந்து அரச அதிகாரியாய் உயர்ந்து - உனைத்
தஞ்சமென வந்த தமிழர்கட்கு தக்க வழிகாட்டினாய் - போரில்
எஞ்சியிருக்கின்ற ஏழைத்தமிழருக்கும் எத்துணை உதவிசெய்தாய்
வீட்டுக்கும் உதவாது வீணாய்ப் போனவர்கள்
நாட்டுக்கும் உதவாது நாசமாய்ப் போனவர்கள்
ஊருக்கு உதவாத ஒழுக்கமற்ற பதர்களெலாம்
பாருக்குப் பாரமாய்ப் பலகாலம் வாழுகிறார் - இறைவன்
ஊருக்கும் உறவுக்கும் உண்மையாய் வாழ்ந்து
பாருக்கு நன்மைசெய்யும் பண்பான உனைப்பறித்தான்
யாருக்கும் புரியவில்லை யாதுசெய்தான் இறைவனென
வஞ்சகமும் சூதும் வாய்மை பேசாப் பொய்யர்களும்
நெஞ்சிலே இரக்கமற்ற நேர்மையிலாத் துட்டர்களும்
வஞ்சிகளை வலைவீசி வஞ்சித்துக் கற்பழிக்கும் காமுகர்கள்
மிஞ்சியே வாழுகின்றார் இம்மேதினியி லாதலினால்
பாழாகிப்போனவர்கள் வாழுமிந்தப் பரிதாப உலகத்தில்
வாழாதே வாவென்று வரவழைத்தான் உனையங்கு
மாளாது நிலைத்தவர்கள் மண்ணில் எவருமிலை இது நியதி - ஆனால்
கேளாது எம்மனது கிட்டியவர் எவரேனும் மரித்துவிட்டால்
மீளாது துயர்கொள்வோம் மேன்மையுள்ள மனிதபண்பு
உடலுக்கு அழிவுண்டு உயிருக்கு அழிவில்லை - எங்கள்
உள்ளங்களிலெல்லாம் வாழ்கின்றாய் நீயென்றுமடா நண்பா!
காவேரியாய்ப் பெருகும் என்கண்ணீர்த் துளிகளைத்
தூரிகைக்கு மையாக்கி தடுமாறும் சொற்களைத் தொடுத்து
உன் பாதகமலங்களில் கண்ணீர்ப் பூக்களாய்ச் சமர்ப்பிக்கிறேன்
கர்ணந்தோட்டக் கந்தனுக்கு நீசெய்த கடமைகள் சிறிதல்ல - அவன்
கிருபையால் அவனது பாதகமலங்களில் உன் ஆத்மா சாந்திபெற
எல்லாம் வல்ல முருகப்பெருமானை இறைஞ்சுகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நண்பன் மா.ஸ்ரீஸ்க்கந்தராஜன் (சிவா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக ஆளுமையுடைய பண்பாளன்

கரைச்சிப் பிரதேசத்தில் கடந்த ஏழு வருடங்களாகவும், தற்போது கண்டாவளைப் பிரதேசத்திலும் பிரதேச செயலாளராக கடமையாற்றிய கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அவர்களது திடீர் மறைவு என்பது எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு மிகுந்த துன்பியல் நிகழ்வாகும். பொதுமக்களுடன் நல்லுறவுடன் அனைவரையும் சமமென மதித்துப் பேசி பணி செய்த ஒரு நல்ல நிர்வாகியாக அவர் இருந்தார். எந்நேரமும் புன்முறுவலுடன் சிரித்தபடி அவர் இருப்பது எப்போதும் அவரை எமக்கு நினைவூட்டியபடியுள்ளது.

அவருக்கென எல்லா இடங்களிலும் எல்லா மட்டங்களிலும் இருந்த நட்பு காரணமாக பல வேலைகளை இலகுவாக்கிப் பணி செய்ய முடிந்திருக்கிறது. நெருக்கடி மிக்க ஒரு சனச்செறிவுள்ள பிரதேச செயலகத்தில் அவர் பொறுமையுடன் ஆற்றிய பணி மெச்சத்தக்கது. மாவட்டத்தின் தேவையறிந்து இங்கேயே தங்கியிருந்து நேரம் பாராது கடமை புரியும் ஓர் அதிகாரியாகவும் எந்தவொரு நிகழ்வையும் தவற விடாது தனது பங்குபற்றுதலை வழங்கிச் சிறப்பிப்பவராகவும் அவர் இருந்து வந்துள்ளார். சூழலை நேசிப்பதிலும் அதன் அழகை துல்லியமாகப் பதிவு செய்து காட்சிப்படுத்துவதிலும் அவருக்கு இருந்த தனி ஈடுபாடு அலாதியானது. கூடி இருக்கும் எல்லா இடங்களிலும் எல்லோரும் மகிழ்ச்சியடையக்கூடியவாறு கலகலப்புடன் அவர் இருப்பது கதை சொல்வதெல்லாம் அவருக்கேயுரிய ஒரு தனி இயல்பாகும்.

தனக்கென ஒரு சொந்த வீட்டை அமைத்து ஓய்வு காலத்தைக் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாகக் கழிக்கக் காத்திருந்த அவரது விருப்புக்கு மாறாக மரணம் அவரை எம்மிடமிருந்து பிரித்துவிட்டது. இத் திடீர் மறைவு ஈடு செய்யமுடியாத ஒரு பேரிழப்பாக அவரது குடும்பத்துக்கும் எமக்கும் அமைந்துவிட்டது. இவ்வகையில் அன்னாரில் துயரில் நாமும் பங்கு கொண்டு ஆறுதல்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

சுந்தரம் அருமைநாயகம்
மாவட்டச் செயலாளர்
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையாளர்

திரு கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அவர்களின் மறைவு எமது பாடசாலைச் சமூகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். இவர் தற்போதைய பாடசாலை அபிவிருத்திக் குழுவின் நிர்வாகக் குழு அங்கத்தவராகப் பணியாற்றி வந்தார். இன்முகத்துடன் மக்கள் சேவையாளராகப் பணியாற்றினார். தனது சேவையை எந்நேரத்திலும் பாடசாலைக்கு வழங்குவதற்குத் தயாராக இருந்தார்.

இலங்கை நிர்வாக சேவையின் அதிகாரியாக கடமையாற்றிய அமரர் திரு. நாகேஸ்வரன் பல்வேறு வகையில் எமது பாடசாலைக்கு தனது பங்களிப்பை வழங்கியிருந்தார். எமது பாடசாலையின் நூற்றாண்டு விழாவை பெற்றோர்களுடன் இணைந்து வெற்றிகரமாக நடத்துவதற்கு தனது பங்களிப்பை வழங்கியிருந்தார். இவ்விழா சம்பந்தமாக எழுந்த பிரதிபலிப்புகளைக் கையாள்வதில் பாடசாலை சமூகத்திற்கு உறுதுணையாகச் செயற்பட்டார்.

இவரது இழப்பினால் பாதிப்படைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு முக்கியமாக அவரது மனைவி. பிள்ளை ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கொண்டலடி விநாயகப் பெருமானை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி, சாந்தி

அதிபர்
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம் ஒன்று சரிந்துவிட்டது

காற்றோடுவந்து காதுக்குள் புகுந்த செய்தி உண்மையில்லை. உண்மையாகவும் இருக்கக்கூடாது என்று எனது அடிமனது வேகமாக உச்சரித்துக்கொண்டிருந்தது. இந்தச் செய்தியை ஏற்க முடியவில்லை. உள்ளம் கலங்கியது. நடந்தது என்னவென்பதும் எப்படி என்பதும் எங்கே என்பதும் கேள்விகளாய் உள்ளத்திலே யாரிடமாவது துருவித் துருவி கேட்டு விடவேண்டும்போல் இருந்தது. தொலைபேசியை ஒரு நாளும்மில்லாதபடி தொடர்ந்து அழுத்தினேன்.

சோகம் நிறைந்த தழுதழுத்த குரல்களும் விம்மி விம்மி அழுகின்ற குரல்களும் ஏக்கத்துடன் விக்கித்த குரல்களும் என் உள்ளம் தொடுத்த கேள்விகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாய் பதில் தந்தன. கேட்ட மறுகணமே நெஞ்சம் கனத்தது. கண்கள் என்னை அறியாமலே நீரைச் சொரிந்தன.

அலுவலகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தபோது பிரதேச செயலாளர் நாகேஸ்வரன் நெஞ்சு வலியால் உபாதைப்பட்டாரென்றும் உடனடியாக தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றிருந்தபொழுது அங்கே உயிர் பிரிந்தது என்றும் அறிந்து அதிர்ச்சியுற்றேன். நான் மட்டுமல்ல இவரைத்தெரிந்தவர்கள், இவரை அறிந்தவர்கள், இவருடன் பழகியவர்கள், இவரோடு பணியாற்றியவர்கள் எல்லோருக்குமே இவருடைய திடீர் மரணம் பேரதிர்ச்சியையும் பெருந்துயரத்தையும் நிச்சயம் கொடுத்திருக்கும்.

கரைச்சி பிரதேச செயலாளராக பல காலம் சேவையாற்றி கண்டாவளை பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்று சில மாதங்களேயான நிலையில் இப்படி ஓர் பேரிடி வீழ்ந்ததே. பிரதேச செயலாளர் திரு நாகேஸ்வரன் அவர்களின் குணத்தை, நல்ல பண்பை, நல்ல சேவையை முழுமையாக தெரிந்து அறிந்து பயன் பெற்றுக்கொள்ளமுடியாமல் ஆக்கிவிட்டதே இவருடைய மரணம்.

பிரதேசத்தின் பெருவிழாவான கலாசார விழா - 2017 கடந்த மாதம் கண்ணகிநகர் கிராமத்தில் சிறப்பாக நடைபெற்றது. கலாசார பேரவையின் தலைவராய் அந்த நிகழ்வின் நாயகனாய் தமிழர்களின் கலாசாரத்தை கட்டியம் போட்டுக்காட்டும் காலாசார உடை உடுத்தி நிமிர்ந்த நடையும், அழகிய புன்சிரிப்பும் கொண்டு நிகழ்வை வழி நடாத்திய பாங்கு கண்முன்னே காட்சியாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிகிறது. இப்பிரதேசத்தின் கலாசார விழாவானது திரு.நாகேஸ்வரன் இணைந்து கொண்ட முதல் விழாவாகவும் இறுதி விழாவாகவும் அமைந்து விட்டதை எண்ணும் பொழுது கலங்காது இருப்பது எப்படி?

அமரர் நாகேஸ்வரன் அலுவலகத்திலும்சரி பிற இடங்களிலும்சரி எல்லோருடனும் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் அன்பாகப்பழகும் பண்புகொண்டவர். உத்தியோகத்தர்கள், அலுவலர்கள் பணியாளர்கள் மட்டுமல்ல சேவையை நாடி வருகின்ற படித்தவர், பாமரர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடில்லாமல் எல்லோரையும் சமமாக மதித்து தேவையறிந்து செயலாற்றும் ஒரு பண்பாளன்.

எவரையும் மனம் நோகப்பேசாதவர். நாகேஸ்வரன் என்ற பெயருக்கு ஏற்றதான ஒரு ஆன்மீகவாளன். ஆலயவழிபாடு, திருத்தொண்டு, திருப்பணி, பொதுத்தொண்டு என்பவற்றிலும் ஏழைகளுக்கு உதவுவதிலும் பெருவிருப்புக்கொண்டவர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் மீள்குடியேற்றத்தின் போதும் மக்களின் துன்ப துயரங்கள் போக்கிட அர்ப்பணிப்புடன் காலம், நேரம் பாராது அயராது சேவையாற்றி அவர்களின் இதயங்களில் நிலையான இடம் பிடித்துகொண்ட ஒரு அரச நிர்வாக அதிகாரி.

தீவகம் வேலணையூரைப் பிறப்பிடமாகக்கொண்டு வாழ்ந்து கற்றுச்சிறந்து யாழ்ப்பாணத்தில் துணைவியாருடன் வாழ்ந்து வந்தவர். இட்டல் இடைஞ்சல் தெரிந்தவர். இளமையையும் உழைப்பையும் உடன் பிறப்புக்களுக்காய் அர்ப்பணித்தவர்.

அரசசேவையில் எழுதுவினைஞராக இணைந்து முயற்சியால் நிர்வாக சேவைக்கு உயர்ந்தவர். மேலதிகாரி என்ற எண்ணம் கொள்ளாமல் எளிமையுடன் எல்லோரையும் அரவணைத்து அறிவும் ஆலோசனையும் வழங்கும் நல்ல மனிதன்.

இந்த மனிதத்தின் மறைவால் ஈடுசெய்ய முடியாத துயர் கொண்டிருக்கும் அன்பு மனைவி, பாச மகன் மற்றும் உற்றார் உறவினர் துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறி அமரர் நாகேஸ்வரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ப.ஜெயராணி,
பிரதேச செயலாளர்,
கண்டாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பால் உயர்ந்த அண்ணல்

கண்டாவளை பிரதேச செயலாளர் அமரர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அவர்களை நான் என் சிறுபராயம் முதல் நன்கறிவேன். ஆழ்ந்த அறிவும், மதிநுட்பமும், கனிவாக பேசும் பண்பும், பார்த்தோர் மனதை கவர்ந்திழுக்கும் வசீகரப் புன்னகையும் வாய்த்த அமரர் திரு.கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அவர்கள் பார்த்தவுடன் எல்லோர் மனங்களிலும் நிலைபெற்றுவிடுவார்.

எனக்கு உற்ற தோழனாக, உயர்வழிகாட்டியாக, என் சக பிரதேச செயலாளராக கடந்த பத்து ஆண்டுகளாக என்னோடு மிக நெருக்கமாக பழகிய அன்னாரின் பிரிவு ஆற்றொணாத் துயரை உண்டாக்கியது.

எமது கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த ஏழு வருடங்களாக பிரதேச செயலாளராக அரும்பணியாற்றியிருந்தார் துன்பத்தால் துவண்ட மக்களின் துயர்துடைக்கும் அருமருந்தாய் அண்ணலின் கனிவான சேவை அமைந்ததை நான் கண்டு வியந்திருக்கின்றேன். கிளிநொச்சி மாவட்டத்தின் அதிக சனத்தொகை கொண்ட கரைச்சி செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளராக துணிச்சலுடன் கடமையேற்று மக்களும், சக உத்தியோகத்தர்களும் பாராட்டும் வகையில் பண்புடன் பணியாற்றியமை அவரது ஆளுமைப் பண்பை உலகறியச் செய்தது.

தன் சேவைக்காலத்தில் பல பதவிகளை வகித்த காரணத்தால் இயல்பாகவே பல நிர்வாக உத்திகளை கற்றுத்தேர்ந்திருந்தார். அதனால் எத்தகைய இடர்வந்தபோதும் சலிக்காது, நிதானமாக, கனிவாக மக்களோடு பேசி, அவர்தம் பிரச்சனைகளை உய்த்துணர்ந்து, வினைத்திறன் மிக்க சேவையை வழங்கியமை எல்லோராலும் வெகுவாகப்பாராட்டப்பட்டது. இத்தகைய உயர் பண்புகளை தன்னகத்தே கொண்டிருந்த அமரர் மிகக்குறுகிய காலத்தில் எம்மைவிட்டு நீங்கினார் எனும் செய்தியை நம்ப மனம் மறுக்கிறது.

ஆயினும் "இயற்கை வலியது" எனும் உண்மை உணர்ந்து சாந்தி பெறுவோமாக. அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் மீளாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினர் மன அமைதி பெற இறைவனை வேண்டிப் பணிகின்றேன்.

திரு. த.முகுந்தன்
பிரதேச செயலாளர்
கரைச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பால் உயர்ந்த அண்ணல்

சவால்களின் மத்தியிலும் சாதித்து துயின்ற மாமனிதன்-அமரர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன். அமரர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் (முன்னாள் கரைச்சி, கண்டாவளை பிரிவுகளின் பிரதேச செயலாளர்) அவர்களின் எதிர்பாராத மறைவு எம்மத்தியில் ஈடெதுவுமற்ற பேரிழப்பு ஆகும். அன்னார் சேவைக்காலத்தில் மக்களுடன் அன்பாகவும் பண்பாகவும் பழகி அவர்களின் தேவைகளை சாதகமாக பரிசீலித்து நிறைவேற்றியவராவார்.

மீள்குடியேற்றத்தின் ஆரம்பகால கட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலாளராக பொறுப்பேற்ற அமரர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அவர்கள் மிகவும் நெருக்கடிகளும் சவால்களும் நிறைந்த பிரதேசத்தில் மனிதநேயத்துடன் பணியாற்றியமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மக்கள் எவரும் அலுவலகத்திற்கு சமூகமளித்து "வெறுங்கையுடன்" வீடு சென்ற வரலாறே கிடையாதெனலாம். அலுவலகத்திற்கு பிரச்சினைகள், தேவைகள் சுமந்து வந்தவர்கள் இவர் முன்பாக சமர்ப்பித்து தம் தேவைகளைப் பூர்த்தி செய்து இன்முகத்துடன் சென்ற வரலாறே ஏராளம். அந்த வகையில் எப்பொழுதும் எவரும் எந்த இடத்திலும் சந்தித்து உரையாடக்கூடிய மிகவும் எளிமையான மனிதராக இருந்தார்.

எமது இல்லத்தின் காப்பாளராக இருந்து இல்லப் பிள்ளைகளுக்கு தந்தையாகவும் தாயாகவும் திகழ்ந்து பல வளங்களைத் தேடித் தந்துதவியதுடன் பிள்ளைகளின் உணவிற்காக அரும்பாடுபட்டு உழைத்த பெருமகன். இவர் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் காட்டிய ஊக்கம், உத்வேகம் என்பன மிகவும் பாராட்டப்பட வேண்டியவை.

இவரது இழப்பு எமது இல்லத்தைப் பொறுத்தவரையில் பேரிழப்பு மட்டுமன்றி ஈடு செய்ய முடியாததொன்று.

அன்னாரின் ஆத்மா இறைவன் திருவடியை இணைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொன். நித்தியானந்தம்
தலைவர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயம் மிக்க மாமனிதன்

மனிதநேயம் மிக்க மாமனிதன் கண்டாவளை பிரதேச செயலர் எம் உதவும் உறவுகளின் உபதலைவர் எம் சேவையின் வழிகாட்டி பண்பும் அன்பும் பாரிய நட்பும் கொண்ட பண்பான மனிதரின் பிரிவினை வார்த்தைகளால் சொல்லிட முடியாது.

"நவில் தொறும் நூல்நயம் போலும் பயில் தொறும்
பண்புடையாளர் தொடர்பு"

என்னும் திருவள்ளுவரின் வாக்கிற்கு இலக்கணமாக விளங்கியவர். எமது சேவைக்கு சிறந்த ஒத்துழைப்புடன் இருந்தது மட்டுமல்லாமல் தமது சேவை மனிதநேயம் மிக்கதாகவும் பாரபட்சம் இல்லாத நேர்மையிற் சிறந்த செயல் வல்லுனராகவும் கடைமையாற்றியவர். மீள் குடியேற்றத்திற்குப் பின் எம் பிரதேசத்திற்கு ஆற்றிய சேவைகள் மிகப்பெரிது. என்றென்றும் அன்னாரின் புகழ் பாடி நிற்கும்.

நான் எனது பொது சேவையின் நிமிர்த்தம் வடகிழக்கில் சில அரச அதிபர்களை சில உதவி அரச அதிபர்களை சந்தித்திருக்கிறேன். சிலரை சந்திக்க முயற்சியெடுத்து பல மணி நேரங்கள் வீணாக்கி திரும்பியும் இருக்கிறேன். ஆனால் இந்த மனிதரை முதல் முயற்சியிலேயே சந்திந்தேன். முதல் சந்திப்பிலேயே அவரின் நல்ல மனமும் நல்ல செயல்களும் ஏழைகளோடு இரண்டறக்கலந்த திறனும் அவர் பழகிய விதமும் நேரம் காலம் பாராது எல்லாருக்கும் அவர் உதவிய விதமும் என்னை அவர் பால் நெருங்க வைத்தது. அன்றுமுதல் இன்றுவரை என் நெருங்கிய நட்போடு உதவும் உறவுகள் அமைப்பின் உபதலைவராகவும் பணியாற்றி எத்தனையோ எழைகளின் வாழ்வில் விளக்கேற்றிய என் அருமை உறவின் பிரிவு நினைக்க முடியவில்லை. உண்மையென்று அறத்தோடு வாழ்ந்த இந்த மனிதரின் இடம் வெற்றிடமாகவே இருக்கப்போகிறது.

எத்தனையோ ஏழைகளின் வாழ்வை உயர்த்திய இந்த மனிதர் இவ்வளவு விரைவாக எம்மை விட்டு பிரிவார் என்று நான் மறந்தும் நினைக்கவில்லை.

எப்பவும் எவரையும் இன்முகத்துடன் அரவணைப்பார். எனக்கு ஏற்படுத்தப்பட்ட நெருக்கடியான நேரங்களில் எல்லாம் உறுதுணையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்ற நண்பனாக கரம் தந்தார்.

யாரும் எந்த நேரமும் எந்த இடத்திலும் எளிதில் அணுகி தங்கள் குறைகளைச் சொல்லி ஆறுதல் பெறக்கூடிய மனிதனாகவே திழ்ந்தார்.

இறைபதம் எய்த முதல் நாள் தொலைபேசியில் கிட்டத்தட ஒரு மணி நேரம் இருவரும் உரையாடினோம். உடல் நலம் பற்றி கேட்டேன் எல்லாம் நோமல் என்றார், அவர் குடும்பத்தில் எல்லாரையும் விசாரித்தேன். இவரின் தம்பி மறைந்து எத்தனை மாதம் என்று கேட்டேன் 7 மாதமாகுது என்றார்.

எல்லாரையும் பற்றி விசாரித்தேன் இன்னும் எவ்வளவு காலம் வேலை என்று கேட்டேன் இன்னும் ஒன்றரை வருடங்கள் இருக்கு என்றார் பென்சன் எடுக்க. வீட்டில போய் இருக்க வேண்டாம் எங்கள் அமைப்போடு வந்து செயலாற்றுங்கள் என்றேன் ஆம் என்றார். ஆனால்? இயமன் முந்தி விட்டானே! கடவுளே!...

எத்தனையோ பல எதிர்ப்புக்களின் மத்தியிலும் தனது சேவையைச் சரிவரச்செய்ய தயங்காத துணிவான மனிதர் அவர் இறுதி மூச்சுவரை பணி செய்தே இறைபதம் அடைந்த பெரியார்.

கடைமையுணர்வு கண்ணியம் கட்டுப்பாடு போன்ற பல உயர்ந்த குணங்களில் இலக்கணமாக திகழ்ந்து எம் பணியாளர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் இருந்த மாமனிதன்.

பரந்த பண்பு அவர் உள்ளத்தில் அருவியெனச் சொரியும் நீரருவி போன்று நீக்கமற நின்றுலாவிய தருணத்தில் அன்னாரைப் பல முறை சந்தித்திருக்கின்றோம். மனிதநேயம் மிக்க மென்மையான பேச்சு கண்டிப்புக் கலந்த வார்த்தை தவறுவிடும் சந்தர்ப்பத்தில் அழகாக எடுத்துக்கூறும் அன்பான வார்த்தையும் அவருக்கு சிறப்பான அம்சமாகும்.

இவருடைய சேவைக்காலம் உதவும் உறவுகளின் பொற்காலம் எனலாம். இத்தகைய ஒரு உயர்ந்த மனிதரது இழப்பு ஈடு செய்ய முடியாத துன்பமான நிகழ்வாகும்.

ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திப்பதுடன் குடும்பத்தினரின் சோகத்திலும் பங்கெடுத்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

உதவும் உறவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபக்தி நோக்கம் கொண்ட அதிகாரி

நாரந்தனை கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. கோ. நாகேஸ்வரன் அமைதியான சுபாவம் ஆனால் தீவிர மான மண்பற்றி, இறைபக்தி, சேவை நோக்கம் கொண்டவர்.

கல்வி கற்கின்ற காலத்திலிருந்து இவருடன் பழகுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நாரந்தனை ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தில் எனது சகோதரரும் இவருடைய சகோதரரும் விளையாட்டு வீரர்களாக இருந்த காரணத்தினால் தொடர்பு நெருக்கமாக இருந்தது. எமது பிரதேச ஆலயங்களின் திருவிழாக்கள் எதையும் தவறவிடமாட்டார். இதே போன்று அரசியல் கூட்டங்களையும் தவறவிடமாட்டார். இதனால் எல்லோருடனும் பழகும் தன்மையும் மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற உணர்வும் வளர்ந்தன. நான் ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவரும் பொதுச்சபை பிரதிநிதியாக இணைந்துகொண்டார். அதன் பின் நெறியாளராக, உப தலைவராக இருந்து சேவையாற்றினார்.

இவர் அரச சேவையில் இணைந்து தொடர்ந்து படிப்படியாக முன்னேறி பிரதேச செயலாளராக உயர்ந்தவர். அரச சேவையில் பல் வேறுபட்ட பதவிகளில் கடமையாற்றியதாலும், எல்லோருடனும் நட்புடன் பழகுகின்ற தன்மையினாலும் எல்லோர் மனதிலும் இடம்பிடித்துக் கொண்டவர்.

அரச அதிகாரியாக இவர் கடமையாற்றுகின்றபொழுது எந்த அளவிற்கு அதை மக்களுக்குப் பயன்படுத்த வேண்டுமோ, அந்தளவிற்கு அதை அவர் பயன்படுத்தினார்.

கர்ணந்தோட்ட கந்தசாமி கோவில் கும்பாபிஷேகத்திற்காக நாங்கள் வவுனியாவிற்கு நிதி சேகரிக்கச் சென்றபொழுது அங்கே செல்வதற்கான வாகன ஒழுங்கு, உணவு வசதிகளைச் செய்ததுடன், கொழும்பு சென்றபொழுது இவர் எத்தனை பெரிய மனிதர்களுடன் பழகி யிருக்கிறார் என்பது தெரியக்கூடியதாகவிருந்தது.

இதற்கு மேலாக, ஆலயத்தின் கலசங்களுக்குத் தேவையான கருங்காலிக் கட்டைகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராது தன்னுடன் பழகியவர்களுக்கு தன்னால் முடிந்தவரை பல உதவிகளை இறுதிவரை செய்துகொண்டிருந் தார். அந்த நல்ல மனிதன் இன்று இல்லை. அவருடைய இழப்பு அவருடைய குடும்பத்தாரிற்கு மாத்திரமன்றி, அவருடன் பழகிய நண்பர் கள், உறவினர்களுக்கும் பேரிழப்பாகும்.

இவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது அன்பு மனைவி, மகன், தாய், சகோதரர்கள், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கர்ணந்தோட்ட கந்தனின் பாதம் பணிந்து வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி !

தி. சுந்தரலிங்கம்
தலைவர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசிய சமூக பாதுகாப்பு விருது- 2017**
**தேசிய மட்டத்தில் பிரதேச செயலாளருக்குரிய விருது- 2ம் இடம்**





**அகில இன நல்லுறவு ஒன்றியம் பொன்னாடை போர்த்தி, 'சாமஸ்ரீ தேசமான்ய' விருது வழங்கிக் கௌரவித்த போது..... (02.04.2016)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**வவுனியா நகரசபையில் வேலை செய்த 1998ம் ஆண்டு அப்போதைய நகரசபை நிர்வாகத்தினரோடு....**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழிநீர் சொரிகின்றோம் ...!

மண்ணில் 04 - 02 - 1960

விண்ணில் 26 - 03 - 2018

நாரந்தனையை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட
முன்னாள் கரைச்சி பிரதேச செயலரும், தற்போதைய கண்டாவளை பிரதேச செயலருமான

அமரர்

## கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன்

தலைசிறந்த மனிதநேயப் பண்பாளன
கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன்
மக்களிற்காக மனிதாபிமானத்துடன்
மகத்தான சேவையாற்றிய மாண்புமிகுவின்
தத்துவ நாயகனாம் நாகேஸ்வரன் ஐயாவே!
நானிலம் போற்றிட நாள்தோறும் பணியாட
நாங்களெல்லாம் வழிகாட்ட தம்மை விட்டு போனதேனோ?
தலைநாயக நாயகனே!
பல்லை காத்து மன்னர்கள் போல
பொறுப்புகளுக்கு தொண்டாற்றி - பலரின்
அன்பைப்பெற்ற பண்பான தூய மனிதக்கடவுளே!
நீர் என்றென்றும் எம் மக்கள் மனங்களில்
நீங்கா இடம் பெற்று உயிர்ப்புடன் வாழ்ந்திடுவீர்!
கரைச்சி, கண்டாவளைப் பிரதேசத்தின்
துயர் துடைத்த தூதுவனே!
உன் உடல் பொருள் ஆவி அனைத்தும்
எம் மக்களுக்காக அர்ப்பணித்த உத்தமனே!
அவனியில் எமை தவிக்கவிட்டு
அமைதியாய் சென்றதேனோ?.
இப்புவியில் யார் நிலைத்தார்
என்று நாம் ஆறுதல் கொள்வோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



# விழிநீர் அஞ்சலி

அமரர்

## கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன்

**(முன்னை நாள் கிளிநொச்சி பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா மண்டலியின் உப தலைவரும், கண்டாவளை பிரதேசசெயலர்)**

மண்ணில் 04 - 02 - 1960

விண்ணில் 26 - 03 - 2018

மணமாறாத் துயரோடு, உம் நினைவோடு
விழியோடு நீரோடு வழி கடந்து செல்கின்றோம்
விளக்கின்றி இருளோடு விண்ணோடு
ஒரு பிறையோடும் விடிவெள்ளியாய் வழிகாட்ட
இன்னுயிர் துறந்து இறையோடு கலந்த
உமக்கு கண்ணீர் மலர் தூவி அஞ்சலிக்கும்
இந்நாளில் எல்லாம் வல்ல பகவானை
வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்ட
பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா மண்டலி
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதநேயத்துடன் மக்கள் பணியாற்றியவர் நாகேஸ்வரன்...

மனித நேயத்தோடு மக்கள் பணியாற்றி, மக்களின் மனங்களில் மதிப்பாக உயர்ந்த சிறந்த சேவையாளரான கண்டாவளை பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரனின் திடீர் மறைவு சமூகத்தில் அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடமை நேரத்தில் மாரடைப்பின் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது நடந்த மரணம் அவருடைய குடும்பத்தினருக்கும் பொதுமக்களுக்கும் சக பணியாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள பேரிழப்பாகும். நாகேஸ்வரனின் பேரிழப்பினால் துயருறும் அனைவருக்கும் எமது ஆறுதலைத் தெரிவித்து, அவர்களுடைய துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்கிறோம் என சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்புத் தெரிவித்துள்ளது.

1996 காலப்பகுதியில் யாழ்ப்பாணம் இடப்பெயர்வுடன் இங்கு வந்த அவர் கரைச்சி பிரதேச சபையின் [illegible] பிரதேசத்தில் இயங்கிய [illegible] பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், அதன் பின்னர் 2012 காலத்திலிருந்து பாராட்டுக்குரிய வகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தன்னுடைய சக்திக்கும் அதிகாரத்துக்கும் அப்பால் சென்று மனித நேயத்தின் அடிப்படையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்.

[illegible]

[illegible]

2012 இலிருந்து 2017 வரை கரைச்சிப்பிரதேச செயலராகப் பணியாற்றிய வேளையில் கரைச்சிப் பிரதேசத்தின் உள்கட்டுமான விருத்தியிலும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிலும் நாகேஸ்வரன் அக்கறைகொண்டு தீவிரமாகச் செயற்பட்டுழைத்தார். [illegible]

மனித நேயம் [illegible] இந்த மனிதநேய மக்கள் பணியை மனதில் நிறுத்தி அவருக்கு **சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின்** சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



# கோபாலபிள்ளை நாகேஸ்வரன்

**பிரதேச செயலாளர்**
**கண்டாவளை, கிளிநொச்சி**

**1960–2018**

## கண்ணீர் காணிக்கை



| மண்ணில் | மனங்களில் |
|---|---|
| 04 | 26 |
| * | * |
| 02 | 03 |
| * | * |
| 1960 | 2018 |

அமரர். கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன் SLAS I

( பிரதேச செயலாளர் - கண்டாவளை , முன்னாள் பிரதேச செயலாளர் - கரைச்சி)

நலிவுற்ற மக்களின் நல்வாழ்விற்காக
நாளும் உழைத்த உன்னதரே
பொலிவான முகம் கனிவான பேச்சு
வீற்ற பல்லாயிரம் பேருக்கு
விடியலைக் கொடுத்தவரே
உங்கள் சேவைகளால் என்றும் எங்கள் நினைவுகளில் வாழ்வீர்கள்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

மாவட்ட உத்தியோகத்தர், பிரதேச பிரிவுகளின் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் [illegible] சமூக சேவைகள் திணைக்களம், கிளிநொச்சி மாவட்டம்.



அலை அலையாய் புயல்கள் வீச
ஆயிரம் தீபங்கள் இங்கு ஏற்றினாய்
ஏற்றிய தீபங்கள் இங்கு எரிந்துகொண்டிருக்க
நீ மட்டும் இங்கு அணைந்ததேனோ......

எல்லோர் நெஞ்சங்களிலும் நீங்கா
நினைவொளியாய் நீ இருப்பாய்......

குடும்பத்தினர் யாவருக்கும் ஆறுதல் உண்டாக
இறைவனை பிரார்த்திக்கின்றோம்..
நாமும் ஆதரவாய் இருக்க உறுதி பூணுகின்றோம்..

காவேரி கலா மன்றம்.
**KKM - VANNI Hope**
குடும்பத்தினர்.

# விழிநீர் அஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 04 | | 26 |
| 02 | | 03 |
| 1960 | | 2018 |



அமரர்
**கோபாலபிள்ளை நாகேஸ்வரன்**
(பிரதேச செயலர், கண்டாவளை)

கடமையில் இருந்தவுமைக் காலைவன் பறித்திடக்
கலங்குகின்றோம் நாமின்று கண்ணில்நீர் சொரிய
திடமுடை நெஞ்சோடு தீர்மானம் எடுத்தீர்
திடீரென்று இறைபாதம் சேர்ந்ததென்ன மாயமோ
நாநிலம் உமையெண்ணி தனிகலங்கி நின்றிட
தனிவிரைந்து நீருமின்று நம்பனடி சேர்ந்தீரோ
பரிதவித்து நிற்கிறோம் பச்சிலைப் பள்ளியினர்
பார்மிசை மீண்டொருகால் பாங்குடன் வாரீரோ...

- பிரிவால் துயருறும்
பிரதேச செயலரும் அலுவலர்களும்
பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 04 - 02 - 1960 | 26 - 03 - 2018 |

அமரர்

**கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன்**


(பிரதேச செயலர் கண்டாவளை, கிளிநொச்சி)
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

**அன்பையும் அறிவையும்**
**அரவணைப்புடன் தந்தவர் நீர்!**
**அவனியில் எமை தவிக்கவிட்டு**
**அமைதியாய் சென்றதேனோ..?**
**இப்புவியில் யார் நிலைத்தார்**
**என்று நாம் ஆறுதல் கொள்வோம்.**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உதவும் உறவுகள்
கவிச்சர்வாந்து,
(பரந்தன், கிளிநொச்சி)



# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 04 - 02 - 1960 | 26 - 03 - 2018 |

**அமரர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன்**
(பிரதேச செயலாளர்-கண்டாவளை)
(முன்னாள் பிரதேச செயலாளர்-கரைச்சி)

உடல் நலம் நோக்காது சேவை ஈந்தீரே
மடல் வலம் உரைக்காது மாண்டுற்றீரே
கடமைகள் காத்துக்கிடக்க மண் துறந்தீரே
உடமை உறவுகள் பூத்துநிற்க விண்ணேகினீரே

நாகேஸ்வரன் ஈஸ்வரன் பாதம் சேர்ந்தீரே
யோகமாக நாட்கள் கலைத்துப் பிரிந்தீரே
பாகமான மனை குழவி குலைந்திட மறைந்தீரே
சோகமாக செயலகம் நிலையிழந்து நிற்குதையா

பாசமான பிரதேச செயலராய் வாசம் செய்தீர்
மோசமான காலத்தில் புனர்நிர்மாணம் தந்தீர்
நேசமான எம் தேசத்தின் உறவே
மாசற்ற உம் பேச்சு கேட்பதெப்போ?


சாந்தி பெறுக

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு
ஆறுதல் தேறுதல் உரைக்கின்றோம்

அரசாங்க அதிபர் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் நாயகம்
மாவட்டப் பணிப்பாளர்
கணக்காளர்
சமுர்த்தி முகாமையாளர்கள்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள்
மாவட்ட சமுர்த்தி அலுவலகம்
மாவட்டச் செயலகம்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது நிறுவனத்தின் (CALSDA) ஆங்கில பொறுப்பாசிரியர் திருமதி. நாகேஸ்வரன் அவர்களின் அன்புக்கணவரின் மறைவையொட்டி நிறுவனம் வழங்கும்

# கண்ணீர் அஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1960 . 04 . 02 | 2018 . 03 . 26 |

அமரர்


## திரு.கோபாலபிள்ளை நாகேஸ்வரன்

தோற்றமும், மறைவும் இயற்கை வகுத்த நியதி யென்றாலும்
இன்பமும், துன்பமும் வாழ்வின் மேடையில்
அரங்கேறும் நாடகமானாலும்
பார்த்து பழகிய கண்களும் பேசிப் பழகிய வாயும்
கேட்டு மகிழ்ந்த காதுகளும்
நினைவுகள் பதித்த நெஞ்சும் ஐயகோ!
அன்னாரின் பிரிவுத் துயரால் தவிக்கிறதே குடும்பம்.

நெஞ்சமதில் நிலைத்து நின்று எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமென மனங்களிலே வீசி நின்றீரே!
கண்ணிமைக்கும் காலத்துள் காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணி மனம் வெதும்பியே வாடுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

பிரிவால் துயருறும்
Thirunelvely Smart Kids
Further Education Unit,
CALSDA



# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன்


நாரந்தனை, ஊர்காவற்றுறை,
கண்டாவளை பிரதேச செயலாளர்


உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

ஆத்திசூடி ஒன்றியம்
வேலணை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர்க் காணிக்கை

மண்ணில்
04
02
1960

விண்ணில்
26
03
2018

## அமரர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன்

(பிரதேச செயலாளர் - கண்டாவளை)
நாரந்தனை

காற்றோடு வந்தசெய்தி கலங்க வைத்த நெம்மனதை - வெறுங்
கூற்றாகப் போகாதோ கூற்றன் உனை மீளானோ
ஆற்றாது அலறுகிறோம் அனைத்துனது ஊரவர்நாம்
தேற்றுதற்கு யாரிமிலை தேம்பியழு தேங்குகின்றோம்

நம்மண்ணின் புகழை நாலிரு திசையும் பறைசாற்றி
எம் மண்ணின் மைந்தனாய் மண்ணுக்குப் பெருமைசேர்த்தாய்
செம்மல் எங்கள் சேவற்கொடியோன் கந்தனுக்குப் பணிசெய்து
உம்மால் முடிந்தவரை ஊர்வந்து திருவிழாவில் பங்கெடுப்பாய்

வாழ வழியற்று வந்தவெம் உறவுகளுக்கு உதவிகள் நல்கி
தோழனாய் நின்று துன்புற்றவர் வாழ்வில் காணிகள் வழங்கி
பாலமாய் நின்று அவர் பயணிக்க பாதைநீ சமைத்தாய்
காலம் இனிவருமோ கண்டுவிட உனை மீண்டும்

சிரித்த வதனமும் சினம்கொள்ளா மனப்பாங்கும் - திருநீறு
தரித்த நெற்றியும் தார்மீகக் கொள்கையும் - என்றும்
பரிவோடு பேசுகின்ற பண்பான நற்குணமும் - இன்று
புரியாத புதிராக போனதுவேன் எமைப் பிரிந்து...!

நின் பிரிவுத்துயரில் மூழ்கி ஆழ்ந்து தவிக்கும்
உன் குடும்பத்தினரோடு நாமும்

நாரந்தனை-சரவணை நண்பர்கள்

https://srimalar58.wixsite.com/onlineseducation [SH-0774488983]



# கண்ணீர் அஞ்சலி..

மண்ணில்:
1960
-
02
-
04

விண்ணில்:
2018
-
03
-
26

அமரர் திரு
## கோபாலபிள்ளை நாகேஸ்வரன்
(கண்டாவளை பிரதேச செயலாளர்)


மெல்லிய புன்சிரிப்பும் மென்நடையில் செல்லும்
தென்றலாயுன உமது அமைதிப் பேச்சும்
எல்லோரையும் மதிக்கும் உயர்ந்த பண்பும் —இவை
உமக்குச் சொந்தமானவை
எந்தவேளையும் துவளாது சேவை புரியும்
உன்னத கரங்களோ உமக்குச் சொந்தமானவை
ஒரு ஊரே கலங்கி நிற்கிறது உமது இழப்பால்
இறைவன் அழைப்பை ஏற்கிறோம்
எமது மனதை தேற்றுகிறோம்....

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கரைச்சிப் பிரதேச
இளைஞர் கழக சம்மேளனம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPOKEN ENGLISH
# பேச்சு ஆங்கிலம்

## A Model Conversation
## (மாதிரி உரையாடல்)

What is your name?
உன்னுடைய பெயர் என்ன?
My name is Babu.
எனது பெயர் பாபு.
Where do you come from?
நீ எங்கேயிருந்து வருகிறாய்?
I come from Jaffna.
நான் யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறேன்.
Is that your native place?
அது உன் சொந்த இடமா?
Yes, I was born and brought up there.
ஆம், நான் அங்குதான் பிறந்து வளர்ந்தேன்.
How old are you?
உனக்கு எத்தனை வயது?
I am twenty years old.
எனக்கு இருபது வயது.
How far have you studied?
நீ எதுவரை படித்திருக்கிறாய்?
I have studied upto 12th standard.
நான் 12ஆம் வகுப்புவரை படித்திருக்கிறேன்.
Have you any other qualification?
உனக்கு வேறு தகுதி ஏதேனும் உண்டா?
Yes sir, I have passed the Higher Grade examination in typing.
ஆம் ஐயா, நான் தட்டச்சு மேல்மட்டப் பரீட்சையிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறேன்.
Have you worked anywhere?
எங்கேயாவது நீ வேலை பார்த்திருக்கிறாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

No, I have been trying to get a job.
இல்லை, ஒரு வேலை எடுப்பதற்காக முயற்சி செய்துகொண்டிருக்கிறேன்.
What is your father?
உன் தந்தை என்ன செய்கிறார்?
He is an assistant in a company.
அவர் ஒரு நிறுவனத்தில் உதவியாளராக இருக்கிறார்.
Why don't you go for higher studies?
நீ மேற்படிப்புக்கு ஏன் செல்லவில்லை?
I could not get a seat in the college.
எனக்கு கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை.
Are you ready to join in our friend's company?
எங்களுடைய நண்பரின் நிறுவனத்தில் நீ வேலையில் சேரத் தயாரா?
By all means, please help me, sir!
மிக்க மகிழ்ச்சியுடன் எனக்கு தயவுசெய்து உதவி செய்யுங்கள், ஐயா!

## Meeting of friends
## நண்பர்கள் சந்திப்பு

**Somu:** Hallo! Deepak, how are you?
**சோமு:** தீபக் நீ எப்படி இருக்கிறாய்?
**Deepak:** Fine! what about you?
**தீபக்:** நன்றாக இருக்கிறேன், நீ எப்படி?
**Somu:** Well, where are you now?
**சோமு:** நல்லது, இப்போது நீ எங்கே இருக்கிறாய்?
**Deepak:** I am staying in Trincomalee.
**தீபக்:** நான் திருகோணமலையில் இருக்கிறேன்.
**Somu:** Where were you all these years?
**சோமு:** இவ்வளவு ஆண்டுகளாக நீ எங்கே இருந்தாய்?
**Deepak:** I was working in a company in Colombo.
**தீபக்:** கொழும்பில் ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந் தேன்.
**Somu:** How is it you are here now?
**சோமு:** இப்போது எப்படி இங்கு இருக்கிறாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Deepak:** I am transferred to their trincomalle branch.
**தீபக்:** அவர்களின் திருகோணமலைக் கிளைக்கு நான் மாற்றப்பட்டிருக் கிறேன்.
**Somu:** Where is your office?
**சோமு:** உன் அலுவலகம் எங்கே உள்ளது?
**Deepak:** In trincomalee town.
**தீபக்:** திருகோணமலைப் பட்டணத்தில்
**Somu:** Have you brought your family here?
**சோமு:** உன் குடும்பத்தினரை இங்கே கூட்டிவந்திருக்கிறாயா?
**Deepak:** Not yet! I must find a house first.
**தீபக்:** இன்னும் இல்லை. முதலில் நான் ஒரு வீடு எடுக்க வேண்டும்.
**Somu:** Then where do you stay now?
**சோமு:** அப்படியானால் இப்போ எங்கே நீ தங்கியிருக்கிறாய்?
**Deepak:** I am staying with my uncle.
**தீபக்:** நான் எனது மாமாவுடன் தங்கியிருக்கிறேன்.
**Somu:** I am glad, we have met after five years.
**சோமு:** ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு நாம் சந்தித்ததில் எனக்கு மகிழ்ச்சி.
**Deepak:** How about you?
**தீபக்:** நீ எப்படி இருக்கிறாய்?
**Somu:** I am looking after my own business.
**சோமு:** எனது சொந்த வியாபாரத்தைக் கவனித்துக்கொண்டிருக்கிறேன்.
**Deepak:** Doing well?
**தீபக்:** நன்றாக நடக்கிறதா?
**Somu:** Exceedingly well?
**சோமு:** அளவுக்கதிகமாக நன்றாக.
**Deepak:** I am happy. Can you help me to find a house?
**தீபக்:** மிக்க மகிழ்ச்சி. எனக்கு ஒரு வீடு எடுக்க உன்னால் உதவமுடியுமா?
**Somu:** Don't worry. There is a portion vacant in my house itself, you can have that.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமு: கவலைப்படாதே. என் வீட்டிலேயே ஒரு பாகம் காலியாக இருக்கிறது. நீ அதை எடுத்துக்கொள்ளலாம்.

**Deepak:** Very kind of you. My botheration is over.

தீபக்: உன் அன்புக்கு நன்றி. என் கவலை நீங்கியது.

**Somu:** Come with me, we shall go to my house.

சோமு: என்னுடன் வா. என் வீட்டுக்குப் போகலாம்.

**Deepak:** How big is the portion?

தீபக்: பாகம் எவ்வளவு பெரியது?

**Somu:** Two rooms, a kitchen and a hall.

சோமு: இரண்டு அறைகள், ஒரு சமையலறை. ஒரு வரவேற்பறை.

**Deepak:** That will do, we are only three.

தீபக்: அது போதும். நாங்கள் மூன்று பேர்தான்.

**Somu:** Boy or girl?

சோமு: பையனா? பெண்ணா?

**Deepak:** Girl, three years old.

தீபக்: பெண், மூன்று வயதாகிறது.

**Somu:** Well, I have a son.

சோமு: நல்லது. எனக்கு ஒரு பையன் இருக்கிறான்.

**Deepak:** I never thought this will happen like this.

தீபக்: இவ்வாறு இதுபோல் நேருமென்று நான் நினைக்கவே இல்லை.

**Somu:** That is how things happen.

சோமு: இப்படித்தான் எல்லாம் நடக்கிறது.

## At the Post Office
## அஞ்சல் நிலையத்தில்

**Jeya:** Excuse me sir.

ஜெயா: மன்னிக்க வேண்டும் ஐயா.

**Post Master:** Yes.

அஞ்சல் அலுவலர்: ஆம்.

**Jeya:** I want to send this parcel, please.

ஜெயா: நான் இந்தப் பார்சலை அனுப்ப வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Post Master:** Do you want to send it by letter post or parcel post?

அஞ்சல் அலுவலர்: நீங்கள் கடித அஞ்சல் மூலமாகவா அல்லது பார்சல் அஞ்சல் மூலமாகவா அனுப்ப விரும்புகிறீர்கள்?

**Jeya:** You'd better send it by parcel post, it might be quicker.

ஜெயா: நீங்கள் பார்சல் அஞ்சல் மூலமாக அனுப்புங்கள். அது விரைவாகச் செல்லும்.

**Post Master:** All right anything else I can do for you?

அஞ்சல் அலுவலர்: சரி வேறு ஏதேனும் செய்யவேண்டுமா?

**Jeya:** Could you weight this letter, please?

ஜெயா: தயவுசெய்து இந்தக் கடிதத்தின் நிறையைப் பார்ப்பீர்களா?

**Post Master:** It is just over ten grams. It will cost you three rupees.

Here's the stamp for the parcel and the letter.

Will you affix them, please?

அஞ்சல் அலுவலர்: இதன் நிறை 10 கிராமுக்கு சற்று அதிகம். இதற்கு மூன்று ரூபா கட்டணம்.

இதோ அதற்கான தபால் முத்திரைகள் உள்ளன.

ஒட்டுவீர் களா?

**Jeya:** I also want twenty Inland letter and five stamped envelopes.

ஜெயா: எனக்கு 20 உள்நாட்டு கடிதங்களும் 5 தபால் வில்லை ஒட்டிய கவர்கூடுகளும் மேலும் வேண்டும்.

**Post Master:** By all means. But wait a minute please.

Let me first give you the receipt for the parcel.

Here is the receipt and here is the postal stationary.

அஞ்சல் அலுவலர்: ரொம்ப சரி. ஆனால் தயவுசெய்து ஒரு நிமிடம் காத்திருங் கள்.

உங்களுக்கு முதலில் பார்சலுக்கு ரசீது தருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தாருங்கள் ரசீது. மேலும் அஞ்சல் எழுதுபொருட்களும் இங்கே இருக்கின்றன.

**Jeya:** Thank you very much. Can I leave the parcel there on the desk infront of you?

**ஜெயா:** மிக்க நன்றி. உங்கள் முன் உள்ள மேசையின் மேலே பார்சலை வைக்கலாமா?

**Post Master:** Yes.

**அஞ்சல் அலுவலர்:** சரி.

## At the Doctor's

## வைத்தியரிடம்

**Patient:** Good evening doctor.

**நோயாளி:** மாலை வணக்கம், மருத்துவர்.

**Doctor:** Good evening, sir. What is your trouble?

**மருத்துவர்:** மாலை வணக்கம் ஐயா. உங்களுக்கு என்ன நோய்?

**Patient:** I have not been feeling very well lately.

**நோயாளி:** சமீப காலமாக நான் உடல்நலக்குறைவாக உள்ளேன்.

**Doctor:** What exactly is the problem?

**மருத்துவர்:** உங்கள் உடலில் சரியாக என்ன பிரச்சினை?

**Patient:** I often feel sick. I have stomach ache and head ache.

**நோயாளி:** எனக்கு அடிக்கடி உடல்நலக்குறைவு ஏற்படுகிறது. எனக்கு வயிற்றுவலியும், தலைவலியும் உள்ளது.

**Doctor:** What is your appetite like?

**மருத்துவர்:** உங்களுக்கு பசி எப்படியுள்ளது?

**Patient:** Not at all good.

**நோயாளி:** நன்றாகவே இல்லை.

**Doctor:** Have you had any fever?

**மருத்துவர்:** காய்ச்சல் இருந்ததா?

**Patient:** Well, I do feel feverish all the time.

**நோயாளி:** நன்று. எனக்கு எப்போதும் காய்ச்சலாக இருக்கிறது.

**Doctor:** All right, let me check your temperature. There is nothing wrong in the pulse.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | Now take off your pull over. |
| | Do you feel any pain here? |
| **மருத்துவர்:** | ரொம்ப சரி. உனது காய்ச்சல் நிலையை சரி பார்க்கிறேன். நாடித்துடிப்பில் எந்தத் தவறும் இல்லை. உன் மேல் சட்டையைக் கழற்று. இங்கே உனக்கு வலி இருக்கிறதா? |
| **Patient:** | Yes, slightly. |
| **நோயாளி:** | ஆம். இலேசாக. |
| **Doctor:** | And here? |
| **மருத்துவர்:** | இங்கே? |
| **Patient:** | Oh, that's quite painful. |
| **நோயாளி:** | ஐயோ. அங்கே அதிகம் வலிக்கிறது. |
| **Doctor:** | All right, you may get dressed now. |
| **மருத்துவர்:** | ரொம்ப சரி. நீங்கள் இப்போது உடையை மறுபடியும் அணியலாம். |
| **Patient:** | I hope there's nothing serious, doctor. |
| **நோயாளி:** | மருத்துவரே. எனக்கு மிக கவலைப்படும் நிலை இல்லை என்று நம்புகிறேன். |
| **Doctor:** | No, nothing serious. Do take some rest. |
| **மருத்துவர்:** | கவலைக்கிடம் ஒன்றுமில்லை. நீங்கள் சில நாள் ஓய்வெடுங்கள். |
| **Patient:** | Do I need to stay away from work, doctor? |
| **நோயாளி:** | மருத்துவரே. நான் வேலைக்குப் போகக்கூடாதா? |
| **Doctor:** | No, not at all. |
| **மருத்துவர்:** | அப்படி ஒன்றுமில்லை. |
| **Patient:** | Thanks! Bye! |
| **நோயாளி:** | நன்றி! போய் வருகிறேன்! |

## Sentences Form
## வாக்கியங்களின் அமைப்பு

| | |
|---|---|
| I | - நான் |
| I am a boy | - நான் ஒரு சிறுவன் |
| I am a man | - நான் ஒரு மனிதன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I am a tailor - நான் ஒரு தையல் தொழிலாளி
I am a doctor - நான் ஒரு மருத்துவர்
I am a teacher - நான் ஓர் ஆசிரியர்
I am a compounder - நான் ஒரு மருந்தாளி
I am a mechanic - நான் ஓர் இயந்திர வல்லுநர்
I am a navigator - நான் ஒரு மாலுமி
I am a artist - நான் ஓர் ஓவியன்
I am a poet - நான் ஒரு கவிஞன்

We - நாம், நாங்கள்
We are scouts - நாங்கள் சாரணர்கள்
We are Americans - நாங்கள் அமெரிக்கர்கள்
We are book-sellers - நாங்கள் புத்தக விற்பனையாளர்கள்
We are boxers - நாங்கள் குத்துச்சண்டை வீரர்கள்
We are officers - நாங்கள் அலுவலர்கள்
We are accountants - நாங்கள் கணக்கர்கள்
We are railway servants - நாங்கள் புகையிரத ஊழியர்கள்

You - நீ, நீங்கள்
You are a car-driver - நீ ஒரு கார் ஓட்டுநர்
You are a hawker - நீ ஒரு தெரு விற்பனையாளன்
You are a merchant - நீ ஒரு வியாபாரி
You are a voter - நீ ஒரு வாக்காளர்
You are an adult - நீ ஒரு வயது வந்தவன்
You are a post-man - நீ ஒரு தபால்காரன்
You are journalist - நீங்கள் பத்திரிகையாளர்கள்
You are priests - நீங்கள் சமய குருக்கள்
You are songsters - நீங்கள் பாடகர்கள்
You are jewellers - நீங்கள் நகை வியாபாரிகள்
You are Hindus - நீங்கள் இந்துக்கள்

He - அவன், அவர், இவன், இவர்
He is a patient - அவன் ஒரு நோயாளி
He is a watchman - அவர் ஒரு காவல்காரர்
He is a warrior - அவர் ஒரு படைவீரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He is a gentleman - அவர் ஒரு பண்பாளர்
He is a gambler - அவர் ஒரு சூதாடி
He is a genius - அவர் ஒரு மேதை
He is a mill owner - அவர் ஓர் ஆலை உரிமையாளர்
He is a prisoner - அவர் ஒரு கைதி

She - அவள், அவர், இவள், இவர்
She is a teacher - அவர் ஓர் ஆசிரியை
She is a receptionist - அவர் ஒரு வரவேற்பாளர்
She is a head-mistress - அவர் ஒரு தலைமை ஆசிரியை
She is a stenographer - அவர் ஒரு சுருக்கெழுத்தாளர்
She is a mid-wife - அவர் ஒரு மருத்துவச்சி
She is a graduate - அவர் ஒரு பட்டதாரி
She is a lecturer - அவர் ஒரு விரிவுரையாளர்
She is a scientist - அவர் ஒரு விஞ்ஞானி
She is a virgin - அவள் ஒரு கன்னி

It - இது, அது
It is a box - இது ஒரு பெட்டி
It is an orange - இது ஒரு தோடம்பழம்
It is a kite - இது ஒரு பட்டம் (காற்றாடி)
It is a watch - அது ஒரு கடிகாரம்
It is a pen - அது ஒரு பேனா

They - இவர்கள், அவர்கள், இவை, அவை
They are mothers - அவர்கள் தாய்மார்கள்
They are brothers - அவர்கள் சகோதரர்கள்
They are children - அவர்கள் குழந்தைகள்

I go to school - நான் பள்ளிக்குச் செல்கிறேன்
I went to school - நான் பள்ளிக்குச் சென்றேன்
I will go to school - நான் பள்ளிக்குச் செல்வேன்
I play - நான் விளையாடுகிறேன்
I played - நான் விளையாடினேன்
I will play - நான் விளையாடுவேன்
I run - நான் ஓடுகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| I ran | - நான் ஓடினேன் |
| I will run | - நான் ஓடுவேன் |
| I am walking | - நான் நடந்துகொண்டிருக்கிறேன் |
| I was walking | - நான் நடந்துகொண்டிருந்தேன் |
| I will be walking | - நான் நடந்துகொண்டிருப்பேன் |
| We travel | - நாங்கள் பயணம் செய்கிறோம் |
| We tavelled | - நாங்கள் பயணம் செய்தோம் |
| We will travel | - நாங்கள் பயணம் செய்வோம் |
| We sing | - நாங்கள் பாடுகிறோம் |
| We sang | - நாங்கள் பாடினோம் |
| We will sing | - நாங்கள் பாடுவோம் |
| You shout | - நீ கூச்சலிடுகிறாய், நீங்கள் கூச்சலிடுகிறீர்கள் |
| You shouted | - நீ கூச்சலிட்டாய் |
| You will be shouted | - நீ கூச்சலிடுவாய் |
| You will be shouting | - நீ கூச்சலிட்டுக்கொண்டிருப்பாய் |
| You cough | - நீ இருமுகிறாய் |
| You coughed | - நீ இருமினாய் |
| You will be cough | - நீ இருமுவாய் |
| You weep | - நீ அழுகிறாய் |
| You wept | - நீ அழுதாய் |
| You will weep | - நீ அழுவாய் |
| You are weeping | - நீ அழுதுகொண்டிருக்கிறாய் |
| You were weeping | - நீ அழுதுகொண்டிருந்தாய் |
| You will be weeping | - நீ அழுதுகொண்டிருப்பாய் |
| She sings | - அவள் பாடுகிறாள் |
| She sang | - அவள் பாடினாள் |
| She will sing | - அவள் பாடுவாள் |
| She is singing | - அவள் பாடிக்கொண்டிருக்கிறாள் |
| She was singing | - அவள் பாடிக்கொண்டிருந்தாள் |
| She will be singing | - அவள் பாடிக்கொண்டிருப்பாள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It rains - மழை பெய்கிறது
It rained - மழை பெய்தது
It will rain - மழை பெய்யும்
It is raining - மழை பெய்துகொண்டிருக்கிறது
It was raining - மழை பெய்துகொண்டிருந்தது
It will be raining - மழை பெய்துகொண்டிருக்கும்

They speak - அவர்கள் பேசுகின்றனர்
They spoke - அவர்கள் பேசினார்கள்
They will speak - அவர்கள் பேசுவார்கள்
They are speaking - அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்
They were speaking - அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர்
They will be speaking - அவர்கள் பேசிக்கொண்டிருப்பார்கள்

me - எனக்கு, என்னை
My father advised me - எனது தந்தை எனக்கு புத்திமதி கூறினார்
Kindly hear me - அன்புடன் நான் சொல்வதைக் கேட்கவும்
Give me a pen - எனக்கு ஒரு பேனா கொடு

my - என்னுடைய
I gave my umbrella - நான் எனது குடையைக் கொடுத்தேன்
My friend talked with me - எனது நண்பர் என்னுடன் பேசினார்

mine - என்னுடையது
The house is mine - அந்த வீடு என்னுடையது
The fountain pen is mine - அந்த ஊற்றுப்பேனா என்னுடையது

our - எங்களுடைய
Our city is big - எங்களுடைய நகரம் பெரியது

us - எம்மை, எமக்கு, எங்களுக்கு
The teacher taught us English - ஆசிரியர் எங்களுக்கு ஆங்கிலம் கற்பித்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| your | - உன்னுடைய, உங்களுடைய |
| I praise your courage | - நான் உனது தையரித்தைப் போற்றுகி றேன் |
| yours | - உன்னுடையது, உங்களுடையது |
| The car is yours | - அந்தக் கார் உன்னுடையது |
| ours | - எங்களுடையது |
| The class-room is ours | - அந்த வகுப்பறை எங்களுடையது |
| his | - அவருடைய, அவனுடைய |
| It is his fault | - அது அவனுடைய குற்றம் |
| him | - அவருக்கு, அவனுக்கு |
| I know him far years | - பல ஆண்டுகளாக அவனை நான் அறிவேன் |
| her | - அவருடைய, அவளுடைய |
| She never gives up her hope | - அவள் ஒருபோதும் நம்பிக்கையை இழப்பதில்லை |
| hers | - அவருடையது, அவளுடையது |
| The articles are hers | - அந்தப் பொருட்கள் அவளுடையவை |
| their | - அவர்களுடைய |
| They raised their hands | - அவர்கள் தங்களுடைய கைகளை உயர்த்தினார்கள் |
| theirs | - அவர்களுடையது |
| The mistakes are theirs | - தவறுகள் அவர்களுடையவை |
| them | - அவர்களை, அவர்களுக்கு |
| I posted letters to them | - நான் அவர்களுக்கு தபாலில் கடிதங்களை அனுப்பினேன் |
| myself | - நானே, எனக்கே |
| ourselves | - எங்களையே, எங்களுக்கே |
| yourself | - நீயே, உனக்கே |
| yourselves | - நீங்களே, உங்களுக்கே |
| himself | - அவனே, அவனுக்கே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

herself - அவளே, அவளுக்கே
itself - அதே, அதற்கே
themselves - அவர்களே, அவர்களுக்கே

I have many friends - எனக்கு பல நண்பர்கள் உள்ளனர்
I had a good garden - என்னிடம் நல்ல தோட்டம் இருந்தது
I will have a cycle - நான் ஒரு மிதிவண்டி பெறுவேன்

We have companions - எங்களுக்கு சகாக்கள் உள்ளனர்
We had a long walk - நாங்கள் நீண்ட தூரம் நடந்தோம்
We will have our lunch - நாம் மதியபோசணம் பெறுவோம்

You have a kind father - உனக்கு அன்பான தந்தை உள்ளார்
You had a fall - நீ கீழே விழுந்தாய்
You will have a prize - உனக்கு பரிசு கிடைக்கும்

He has a printing press - அவனுக்கு ஓர் அச்சகம் உள்ளது
He had a horse - அவனிடம் ஒரு குதிரை இருந்தது
He will have my good will - அவன் எனது நல்லெண்ணத்தைப் பெறுவான்

They have no fear - அவர்களுக்குப் பயம் இருக்காது
They had plenty of rice - அவர்களிடம் அரிசி மிகுதியாக இருந்தது
They will have attention - அவர்கள் கவனத்தைப் பெறுவர்
They will solve our problem - அவர்கள் நமது பிரச்சினையைத் தீர்ப்பார்கள்

## Some Imperative sentences
## சில வேண்டுதல் வாக்கியங்கள்

Allow me to speak - என்னைப் பேச அனுமதியுங்கள்
Arrange a meeting - சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்
Brush your hair - தலைவாரு (தலை சீவு)
Bless me - என்னை வாழ்த்துங்கள்
Close your eyes - உனது கண்களை மூடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Clean your house - உனது வீட்டை சுத்தம் செய்
Count the numbers - எண்களைக் கணக்கிடு
Do your work - உன் வேலையைச் செய்
Draw a picture - ஒரு படம் வரை
Drive the car carefully - காரைக் கவனமாக ஓட்டு
Eat well - நன்றாகச் சாப்பிடு
Earn good name - நல்ல பேரைச் சம்பாதி
Fall down - கீழே விழு
Fold the mat - பாயை மடி
Give your pen - உன் பேனாவைக் கொடு
Get your pen - உன் பென்னைப் பெற்றுக்கொள்
Come in - உள்ளே வா
Get out / Get last - வெளியே போ
Shut up (your mouth) - உன் வாயை மூடு
Go forward - முன்னால் செல்
Go backward - பின்னோக்கிச் செல்
Go ahead - முன்னேறு
Heat the water - தண்ணீரைச் சூடுபடுத்து
Hear my words - என் சொல்லைக் கேள்
Help the poor - ஏழைகளுக்கு உதவு
Hold the tongue - பேசாதே
Hold the rope - கயிற்றைப் பிடி
Inhale - மூச்சை உள் இழு
Increase the power - சக்தியை அதிகப்படுத்து
Improve your business - உன் தொழிலை விருத்தி செய்
Join th hands - கைகளைச் சேர் / கும்பிடு
Jump into the river - ஆற்றில் குதி
Keep your promise - சத்தியத்தை நிறைவேற்று /சொன்னதைச் செய்
Kilt the belt - பெல்டைக் கட்டு
Knock down - இடித்துத் தள்ளு
Lead me - எனக்கு வழிகாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Learn by heart - மனதிற்குள் படி
Leave the place - அந்த இடத்தை விட்டு விலகு
Lock the door - கதவை மூடு
Love the country - நாட்டை நேசி
Live long - நீண்ட காலம் வாழ்க
Mend your house - உங்கள் வீட்டைச் சரிசெய்யுங்கள்
Make friends - நேசங்கொள்
Meet my friends - என் நண்பர்களைச் சந்தியுங்கள்
Memorize the poem - இந்தக் கவிதையை மனப்பாடம் செய்
Mention his name - அவன் பெயரைக் குறிப்பிடுக
Mix the water - தண்ணீரைக் கல
Move aside - ஓரத்தில் நகர்க
Multiply the numbers - இந்த எண்களைப் பெருக்குக
Name the dog - இந்த நாய்க்குப் பெயர் வை
Narrate the story - இந்தக் கதையைச் சொல்
Negotiate the rate - விலையைப்பற்றிப் பேசு
Note it down - குறித்து வைத்துக்கொள்
Obey your parents - உன் பெற்றோருக்கு கீழ்ப்படி
Oblige your parents - உன் பெற்றோருக்கு கடமைப்படு
Pack your laggages - மூட்டை முடிச்சுகளைக் கட்டு
Peel the onion - வெங்காயத்தை உரி
Play well - நன்றாக விளையாடு
Purchases good books - நல்ல புத்தகங்களை வாங்கு
Purity the water - தண்ணீரைச் சுத்தம் செய்
Put off the T.V. - டி.வி.யை நிறுத்து
Pull the door - கதவை இழு
Push back - பின்னால் தள்ளு
Quench your thurst - உன் தாகத்தைத் தணி
Quicken your steps - தடையைத் துரிதப்படுத்து
Raise your hand - கைகளை உயர்த்து
Read the letter - இந்தக் கடிதத்தை வாசி
Return my book - என் புத்தகத்தைத் திருப்பிக்கொடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Remember me | - என்னை ஞாபகம் வைத்துக்கொள் |
| Recall it | - ஞாபகம் வைத்துக்கொள் |
| Record it | - பதிவு செய் |
| Reply to my question | - என் கேள்விக்குப் பதில் சொல் |
| Relax for sometime | - சற்று நேரம் ஓய்வெடு |
| Remark his fault | - அவன் குற்றத்தைக் குறிப்பிடு |
| Remove your shirt | - உன் சட்டையைக் கழற்று |
| Ride the bike | - மோட்டார்சைக்கிளை ஓட்டு |
| Run along | - என்னோடு ஓடிவா |
| Ring the bell | - மணி அடி |
| Say loudly | - சப்தமாகச் சொல் |
| See the picture | - படத்தைப் பார் |
| Sell the old car | - இந்தப் பழைய காரை விற்றுவிடு |
| Seek a job | - ஒரு வேலையைத் தேடு |
| Strike the photo | - போட்டோவை ஒட்டு |
| Send him a gift | - அவனுக்கு ஒரு அன்பளிப்பு அனுப்பு |
| Select one book | - ஒரு புத்தகத்தைத் தேர்வு செய் |
| Sing a song | - ஒரு பாட்டுப் பாடு |
| Sit here | - இங்கு உட்கார் |
| Seal the bottle | - போத்தலை மூடு |
| Shut the door | - கதவை மூடு |
| Stop smoking | - புகைப்பிடித்தலை நிறுத்து |
| Take your book | - உன் புத்தகத்தை எடு |
| Treat them well | - விருந்தாளிகளை உபசரி |
| Use your brain | - மூளையைப் பயன்படுத்து |
| Visit your factory | - உன் தொழிற்சாலையைச் சென்று பார் |
| Warn them | - அவர்களை எச்சரிக்கை செய் |
| Walk fast | - வேகமாக நட |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Proverbs
## ஒத்த பழமொழிகள்

A bird in the hand is worth two in the bush
கிடைக்கும் பலாக்காயை விட இருக்கும் களாக்காய் மேல்
Art is long and life is short
கல்விக் கரையில் கற்றவர் நாள் சில
Blood is thicker than water
தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்
Bare words buy no barely
வெறும் கை முழம் போடாது
Bird of the same feather flock together
இனம் இனத்தோடுதான் சேரும்
Coming events casts their shadows before
யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே
Don't carry coal to new castle
கொல்லன் பட்டறையில் ஊசி விற் காதே
Distance lends charm to things
இக்கரைக்கு அக்கரை பச்சை
Don't rob peter to pay paul
கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்காதே
Do not look a gift horse in the mouth
தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்காதே
East or west, home is best
எலி வளையானாலும் தனிவளை சிறந்தது
Good homer sometimes nods
யானைக்கும் அடி சறுக்கும்
Every home has skeleton in its cup-board
வீட்டுக்கு வீடு வாசற்படி
Failures are stepping stones to success
தோல்வியே வெற்றிக்கு முதற்படி
Familiarity breeds contempt
பழகப் பழக பாலும் புளிக்கும்
Face is the index of the mind
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
Faults are thick when love is thin



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாப் பெண்டாட்டி கை பட்டாலும் குற்றம் கால் பட்டாலும் குற்றம்
Health is wealth
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல் வம்
Habits die hard
தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்
Haste makes waste
பதறிய காரியம் சிதறும்
Jack of all trade is master of none
பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் காணான்
Make hay while the sun shines
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
Man proposes God disposes
நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்
Misfortunes never come single
பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்
Neccessity knows no law
ஆபத்துக்கு பாவமில்லை
Penury pinches all
பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்
Strike hard while the iron is hot
அலை மோதும்போதே தலை முழுகு
Tit for tate
பழிக்குப் பழி
There is no smoke without fire
நெருப்பின்றி புகையில்லை
There is no use casting pearls before a wine
கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை
The mill of god grind slow but sure
அரசன் அன்று கொல்வான் இறைவன் நின்று கொல்லும்
Time and tide wait for no man
ஐயர் வரும்வரை அமாவாசை காத்திராது
Union is strength
ஒற்றுமையே பலம்
Where there is a will, there is way
மனம் இருந்தால் மார்க்கமுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்...!

எமது குடும்பவிளக்கு
அமரர் திரு. நாகேஸ்வரன் அவர்கள்
மரணமெய்திய வேளை மனமுடைந்த எங்களுக்கு
ஓடோடி வந்து உதவிகள் புரிந்த நல்லுள்ளங்களுக்கும்
ஆறுதல் வார்த்தைகள் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்
கண்ணீர் அஞ்சலிகள், பிரசுரங்கள், அனுதாபங்கள், தெரிவித்தவர்களுக்கும்
மலர்வளையங்கள், மலர்மாலைகள் செலுத்தியவர்களுக்கும்
மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும்
இணையத்தளம், முகநூல் வாயிலாக வருத்தத்தைத்
தெரிவித்தவர்களுக்கும், இன்றைய வீட்டுக்கிரியை
நிகழ்வில் கலந்து அவரின் ஆத்மசாந்திக்காய்ப்
பிரார்த்தித்த அனைவருக்கும், இந்நூலை
அழகுற அச்சுப்பதிப்புச் செய்துதவிய
"மதி கலர்ஸ்" உரிமையாளர்கள்
மற்றும் பணியாளர்களுக்கும்
எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


இங்ஙனம்
மனைவி, மகன்
மற்றும் குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




❖ அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org